

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

ஐப்பசி - கார்த்திகை
நவம்பர் - 2020

மலர் 9 இதழ் 11

## பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆசிரியர் பக்கம் | 3 |
| வண்டு ஸ்தோத்ரம் | 5 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 7 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 9 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| தமிழ் பாகவதம் | 14 |
| ஸ்ரீ தேவி பாகவதம் | 17 |
| ஆசாரமும் ஒழுக்கமும் | 19 |
| தொன்மையான இந்து மதம் | 21 |
| தசதானம், பஞ்சதானம் | 26 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரீ - 30 | 32 |
| கௌஸல்யா கவசம் | 34 |
| புராணக்கதை | 36 |
| ஸ்யாமளா தண்டகம் பலஸ்ருதி | 38 |
| வேதாந்த ஸாரம் | 39 |
| மகாபாரத சுருக்கம் | 41 |
| அத்வைத வினா - விடை | 43 |
| ஜய தேவர் அருளிச் செய்த பஜகோவிந்தம் | 45 |
| ஸனாதன தர்மம் : கேள்வி பதில்கள் | 47 |


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ N. சிவராமகிருஷ்ணன்
ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்
டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்
டாக்டர் G. சங்கரநாராயணன்




ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :
டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்
டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா
பேராசிரியர் ம.வே.பசுபதி
பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்



வெளியிடுவோர் :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

அலுவலக முகவரி :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com


சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jaiganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।

कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ஆசிரியர் பக்கம்

## *தீபாவளி மகிமை*

புஸ் டப் டபார் க்யூங்க் இந்த சப்தங்களுடன் எல்லாரும் கொண்டாடும் பண்டிகை தீபாவளி.''தைலே லக்ஷ்மீ ஜலே கங்கா'' என்று ப்ரும்ம முகூர்த்தத்தில் எண்ணெய் ஸ்நானம் பின்பு பட்டாசு வெடித்தல், நண்பர்களுடன் மகிழ்ந்திருத்தல் இப்படி கொண்டாட்டமாக வருஷா வருஷம் கொண்டாடப்படுகிறது. பாரதம் முழுக்க இதுதான் வழக்கம். தமிழகத்தில் தீப அலங்காரம் வீடுதோறும் கார்த்திகை மாதத்தில்தான் செய்யப்படுகிறது. வட இந்தியாவில் தீப அலங்காரம் ஐந்து நாள் செய்யப்படுகிறது. இந்த தீபாவளிப் பண்டிகையை நாம் ஒரு நாள் தான் கொண்டாடுகிறோம். உண்மையில் இது ஐந்து நாள் பண்டிகை. இது பற்றியும் இதன் தாத்பர்யம் பற்றியும் பார்ப்போம்.

1. தன்வந்தரி ஜயந்தி, 2. நரக சதுர்தசீ, 3. லக்ஷ்மீ குபேரபூஜை, 4. கோவர்தன பூஜை, 5. பாய் தூஜ்.

**1. தன்வந்தரி பூஜை :** த்ரயோதசி அன்று தன்வந்தரிக்கு விசேஷ பூஜை செய்யப்படும். அவர் அவதாரம் நிகழ்ந்த நாள். மேலும் அன்று மாலை பெரிய அகண்ட மண் பாத்ரத்தில் தீபம் ஏற்றப்படும். இதை ''யம தீபம் '' என்பர். ஸ்ரீமடத்தில் வழக்கமாகச் செய்யப்படுகிறது.

**2. நரக சதுர்தசீ :** இதுதான் தீபாவளி. ப்ரும்ம முகூர்த்தத்தில் எழுந்து தைல ஸ்நானம் செய்வது, முக்யமாக யமனுக்குத் தர்ப்பணம் செய்வது. இவை இரண்டும் வைதிகர்களால் கடைபிடிக்கப்படுகிறது. பட்டாசு வெடித்தல், சம்ப்ரதாயத்தில் உள்ளது. மத்தாப்பு கொளுத்துதல் பித்ருக்களுக்கு ''உல்கா தர்சனம்''என்று கொண்டாடப்படுகிறது. சாஸ்த்ர சம்மதமே. மேலும் பல லக்ஷக்கணக்கான ஏழை மக்களின் ஜீவனோபாயமாக உள்ளது. வட நாட்டில் எங்கும் தீபம் ஏற்றி கொண்டாடும் நாள். ஜைன மத ஸ்தாபகர் மகாவீரர் நிர்வாணம் அடைந்த நாள்.

**3. லக்ஷ்மீ குபேர பூஜை :** இது பெரும்பாலும் வடக்கத்தியர்களால் பொதுவாக சேட் என்று சொல்லப்படுவர்களால் கொண்டாடப்படும். அவர்களுக்கு புதுக் கணக்கு எழுதும் நாள்.

**4. கோவர்தன பூஜை :** இதுவும் வடக்கத்தியர்களால் கொண்டாடப்படுகிறது. க்ருஷ்ணபூஜை, பஜனை நடைபெறும்.

**5. பாய் தூஜ் :** இது ஐந்தாம் நாள் கொண்டாடப்படும். பெண் பிள்ளைகள் தங்களின் சகோதரர்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடும் நாள். யமன் தன் சகோதரி யமியைச் சந்திக்க அவள் வீட்டுக்குப் போக அவனுக்கு ஆரத்தி எடுத்து இனிப்பு வழங்கியதைக் கொண்டாடும் நாள்.

வாசகர்களுக்கு சற்று ப்ரம்மிப்புத் தட்டும். நாம் அறிந்த தீபாவளியிலிருந்து வேறுபடுகிறது. ஆனாலும் பாரதம் முழுக்க இப்பண்டிகை கோலாகலத்துடன் கொண்டாடப்படுகிறது. நவராத்ரி எப்படியோ அப்படியே. நம் மதத்தில் எந்த பண்டிகைக்குப் பின்னும் ஒரு தாத்பர்யம் இருக்கும்.

இப்பண்டிகையின் தாத்பர்யமென்ன? மஹாபெரியவா கூறுவார். ''பூமாதேவி தன் பிள்ளை க்ருஷ்னனால் கொல்லப்பட்ட போது புத்ரசோகத்தில் அவள் இருந்தாலும் தன் பிள்ளை மரணித்த நாளில் அனைத்து மக்களும் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும் என்கிறாள்.

புராணாந்தரத்தில் நரகாசுரனே அப்படி கேட்பதாக வருகிறது. எப்படி பார்த்தாலும் தனக்கு அல்லது தன்னைச் சார்ந்தவர்களுக்குத் துன்பம் வந்தாலும் மற்ற மக்கள் நலத்துடன் இருக்க வேண்டும் எனும் எண்ணம், ப்ரார்த்தனை, பரந்த மனப்பான்மை எத்தனை பேருக்கு வரும்.'' எனவே தீபாவளி கொண்டாடும் நாம் அப்பேர்பட்ட நல்ல எண்ணத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த நன்னாளில் எழைகளுக்கு நம்மால் ஆன உதவிகளைச் செய்யவேண்டும் என்று கூறிக்கொண்டு இவ்விதழை ஸ்ரீசரணர்களின் பொற்பாதத்தில் சமர்ப்பிக்கிறோம். உள்ளொளி பெருக்க தீபங்கள் ஏற்றுவோம்.

'தமஸோ மா ஜ்யோதிர் கமய'' என்று தீபாவளியை வரவேற்போம்.

★★★★★★★★

## யம தர்ப்பணம்

கீழ்கண்ட மந்த்ரங்களை சொல்லி **நரக சதுர்தசி** காலை தர்ப்பிக்கவேண்டும்

யமம் தர்ப்பயாமி, தர்மராஜம் தர்பயாமி, ம்ருத்யும் தர்பயாமி, அந்தகம் தர்பயாமி, வைவஸ்வதம் தர்பயாமி, காலம் தர்பயாமி, ஸர்வபூதக்ஷயம் தர்பயாமி, ஔதும்பரம் தர்பயாமி, தத்னம் தர்பயாமி, நீலம் தர்பயாமி, பரமேஷ்டினம் தர்பயாமி, வ்ருகோதரம் தர்பயாமி, சித்ரம் தர்பயாமி, சித்ரகுப்தம் தர்பயாமி.

# வண்டு ஸ்தோத்ரம்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

C ¸ Á øPa \¢u [ PÒ



மூன்றாவதாக அர்த்தார்த்தி முதலில் சொன்ன 'ஆர்த்தி'யில் வருகிற 'தி' வேறே; இங்கே 'அர்த்தார்த்தி'யில் சொல்கிற 'தி'யும் 'தா'வும் வேறே. ஸம்ஸ்க்ருதத்தில் 'க' வர்க்கம். 'ச' வர்க்கம், 'ட' வர்க்கம், 'த'வர்க்கம்' 'ப' வர்க்கம் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் நாலுவிதமான சப்தங்கள் உண்டு. 'க'வை எடுத்துக் கொண்டால் முதலில் Ka; அப்புறம் அதையே அழுத்தி Kha; மூன்றாவதாக Ga-கங்கை என்பதில் வருகிற மாதிரி; நாலாவதாக இதையும் அழுத்தி Gha. இப்படியே ச, ட, த, ப-விலும் நன்னாலு உண்டு. 'த' வில் முதல் சப்தம் Ta தான் 'ஆர்த்தி'யில் அர்த்தார்த்தி' என்பதில் வருகிற 'தா'வும் 'தி' யும் இரண்டாவது 'த'---Tha. 'அர்த்தார்த்தி' என்றால்' பொருளை இச்சிக்கிறவன்' என்று அர்த்தம், ' அர்த்தம்' என்றால் பொருள்; அதாவது பணம். அர்த்தி' என்றால் அதை வேண்டுகிறவன்.

முதலில் துன்புற்றவனைச் சொன்னாரே, அதிலேயே பொருள் இல்லாமல் கஷ்டப்படுகிறவனும் அடக்கம் தான். அதனால் இங்கே பிரித்துச் சொல்லியிருக்கிற அர்த்தார்த்தி என்பவன் வறுமையால் கஷ்டப்படுகிறவன் அல்ல. வாழ்க்கை நடத்தவே முடியாமல் இவன் ச்ரமப்படவில்லை. ஆனாலும் இதுபோதாது. இன்னும் நிறைய ஸுபிக்ஷம் வேண்டும் என்று பகவானை ப்ரார்த்தனை பண்ணுகிறான். நம்மில் பல பேர் இப்படித்தான் இருக்கிறோம். காலக்ஷேபம் நடக்க நமக்கு ச்ரமமில்லை தான். இருந்தாலும் இன்னும் நிறைய ஸௌகர்யம், வீடு வேண்டும், கார் வேண்டும் என்று ஆசை இருக்கத்தான் செய்கிறது. ஸப் கலெக்டர், கலெக்டராக ப்ரமோஷன் கிடைக்க வேண்டும் என்று ப்ரார்த்தனை பண்ணுகிறார். கலெக்டர் மாகாணம் பூராவுக்கும் ஏதாவது ஓர் அதிகாரியாக வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறார்.

'அர்த்தம்' என்றதில் பணம் மட்டுமில்லாமல் பதவி, கௌரவம், புகழ் எல்லாவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம். நாலாவதாக ஞானியைச் சொன்னார். ஞானியும் தன்னை பஜிப்பதாக ('பஜந்தே மாம்' என்று) சொல்கிறார். சற்று முன்னாடிதான் சொன்னேன், ஞானியாகி விட்டால் அப்புறம் பகவான், பக்தன் என்ற வித்யாஸமேயில்லாமல்

பரமார்த்த ஸத்யமான ஒரே ஏகத்தில் இவன் கரைந்து அங்கே பூஜை, த்யானம் எல்லாம் நின்று போய்விடுகிறது என்று. இங்கே இப்படி ஞானியும் பக்தி பண்ணுவதாக பகவானை quote பண்ணுகிறேனே (மேற்கோள் காட்டுகிறேனே) என்றால் ; ஞான ஸமாதி நிலையில் பகவானுக்கு வேறாக பக்தன் இல்லை தான். ஆனால் ஞானி எப்போதுமே இப்படி லோக ப்ரக்ஞை இல்லாமல் நிர்விகல்ப ஸமாதியில் இருப்பதில்லை. அவனுக்கு வெளி உணர்வு இருக்கிற-அல்லது இருக்கிற மாதிரி வெளி உலகத்துக்குத் தோன்றுகிற --ஸமயங்களும் உண்டு. அப்படிப் பட்ட ஸமயங்களில், ஸமாதி நிலையில் எந்த நிர்குண நிராகார (குணமும் உருவமும் இல்லாத) ஸத்ய வஸ்துவோடு இரண்டறக் கலந்திருந்தானோ, அதே வஸ்து லீலா நிமித்த மாகப் பல குணங்களோடு, ரூபங்களோடு லோக நிர்வாஹம் பண்ணுகிறதை ஞானியானவன் ரஸிக்கிறான். ' வாஸுதேவஸ் ஸர்வமிதி' என்று அந்த வாஸுதேவனே கீதையில் சொன்ன மாதிரி இந்த ஞானி லோகத்தில் எதைப் பார்த்தாலும் அதைப் பரமாத்மாவாகவே பார்த்து, 'இதுவும் அதன் இன்னொரு வேஷம், இன்னொரு விதமான 'லீலை' என்று அதை ரஸிக்கிறான். ஆசார்யாள் 'பஜ கோவிந்த'த்தில் 'நந்ததி நந்ததி நந்ததி ஏவ' என்று மூன்று தடவை திரும்பத் திரும்பச் சொன்னது மாதிரி எதிலும் எப்போதும் பரமாத்ம ரஸத்தையே ருசித்துக்கொண்டு ஆனந்த மயமாக இருக்கிறான். இந்த ஞானி (வெளி ப்ரக்ஞையற்ற) நிர்விகல்ப ஸமாதியில் இல்லாமல் பஹிர் முகமாக (வெளி ப்ரக்ஞையுடன்) இருக்கிறபோதுகூட அவனுக்கு வெளி - உள் எல்லாம் ஒன்றுதான். வேதத்தில் சொன்னது போல் உள்ளே வெளியே எல்லாம் அந்த ஒரே நாராயணன், வாஸுதேவன், பரமாத்மாதான் வ்யாபித்திருக்கிறது என்ற உள்ளுணர்வு இருந்துகொண்டே இருக்கும்.

ஞானி அடைய வேண்டியது எதுவுமே இல்லை. ஆகவே, அதைத் தா, இதைத் தா' என்று ப்ரார்த்திக்க வேண்டிய அவச்யம் அவனுக்கு இல்லை. ஒரு ப்ரார்த்தனையும், காரணமும் இல்லாமல், தன்னால் அன்பாகத்தான் இருக்க முடிகிறது என்பதாலேயே பரமாத்மாவிடம் அன்பாயிருக்கிறானே, இது தான் பரம பரிசுத்தமான பக்தி. 'அஹைதுகீ பக்தி' (ஹேது அல்லது காரணம் இல்லாத பக்தி) என்று இதை ப்ரஹ்ம (ஞானியான சுகாசார்யாள் பாகவதத்தில் சொல்கிறார். இவனை ஒருத்தர் கத்தியால் வெட்டினால் கூட அதிலிருந்து காப்பாற்றும்படி இவன் ப்ரார்த்தனை பண்ணமாட்டான். ஏனென்றால், தான் சரீரமில்லை, ஆத்மாதான் என்ற உள் அநுபவம் இவனை விட்டு அப்போதும் விலகியிருக்காது. அந்த நிலையிலும் ப்ரார்த்தனை பண்ணாமலே பகவானிடம் பக்தியாக அன்புமயமாக இருப்பான்.

(தொடரும்)

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## அனசூயை

### கற்பின் பெருமை

கைகேயியின் கட்டளைக்குட்பட்டு இராமன் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் மேற்கொண்டான். சீதையும் இலக்குமணனும் அவனுடன் சென்றனர். சித்ர கூட மலையை விட்டு தண்டகாரண்யம் புகும் வழியில் அத்திரி மாமுனிவரின் ஆசிரமத்தை அடைந்தனர். அம் முதியவர் சீதையைத் தன் மனைவியாகிய அனசூயையிடம் ஒப்புவித்தார். இராம இலக்குமணர்களிடம் அம்முனிவரே, தன் மனைவியின் சிறப்பை விவரித்தார். அனசூயையிடம் பிறர் யாரும் அசூயை கொள்ளக் கூடாத மேன்மையை உடையவள். அறத்தையே வழியாகக் கொண்டவள். தவ ஆற்றலில் சிறந்தவள். ஒரு சமயம் பத்து ஆண்டுகள் மழையின்றி புல் பூண்டுகள் உலர்ந்து மரம் செடி கொடி அனைத்தும் பட்டுப் போயின. ஆனால் அனசூயையினைச் சுற்றியிருந்த இடம் பச்சைப்பசேலென்று தளிர்களால் விளங்கியது. தவ வலிமையால் கங்கையில் வற்றிப் போன நீரோட்டத்தை மீண்டும் வருவித்தாள். தேவர்கள் ஒரு முறை வேண்டியபடி பத்து நாட்களைத் தொடர்ந்து ஒரே இரவாகச் செய்தாள்.



நாரதர் அனசூயையின் புகழை விவரிக்கவும், முப்பெரும் தெய்வங்களும் அவளுடைய பெருமையை உலகம் அறியுமாறு செய்ய ஒரு சோதனையை மேற் கொண்டனர். பிரமன், திருமால், சிவன் மூவரும் முனிவர் வடிவ வேடத்துடன் அனசூயையின் இல்லத்தில் உணவிடுமாறு வேண்டினர். அவள் உணவு பரிமாற வந்தபோது அவள் நிர்வாண நிலையில் உணவிட வேண்டுமென்று சொல்லினர். மிகுந்த தவ ஆற்றலுடைய அனசூயை பரம் பொருளைப் பிரார்த்தித்து அவர்கள் மீது தீர்த்தத்தைத் தெளித்தாள். புனித நீர் அவர்கள் மீது விழுந்ததும் மும்மூர்த்திகளும் குழந்தைகளாகி விட்டனர். அவர்கள்

முன்பு விதித்த நிபந்தனைப்படியே அனசூயை அக் குழவிகளுக்குப் பாலூட்டினாள். பின்பு, கலைமகள், அலைமகள், மலைமகள் மூவரும் வந்து அனசூயையை வேண்டி தத்தம் கணவரைப் பழைய உருவில் அடைந்தனர்.

விரதங்களை எல்லாம் நோற்று மிகவும் நலிந்த உடலுடைய அம் மூதாட்டி சீதையை மிகவும் அன்புடன் சீராட்டித் தன் அணிகலன்களையெல்லாம் அவளுக்கு அளித்தாள். மேலும் கற்பு நெறியைப் பற்றிய வாழ்வின் சிறப்புகளையெல்லாம் சீதைக்கு எடுத்தியம்பினாள்.

இராம இலக்குமணர்களும் சீதையும் தவத்தாலும், வயதாலும் முதிர்ந்த அத்தம்பதியை வணங்கி, ஆசி பெற்றுத் தண்டகம் நோக்கிச் சென்றனர்.






# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## இந்து சமய கலை, கலாசார விழா

*05.06.2019 முதல் 10.06.2019 வரை*



**ஸ்ருதி ஸ்மிருதி புராணானாம் ஆலயம் கருணலயம்**
**நமாமி பகவத்பாத சங்கரம் லோகசங்கரம்.**

*ஜோதிடத்தின் சிறப்பை சீதாரமய்யர் மிக நன்றாக எடுத்துரைத்தார். இன்றைக்கு, ஆயுர்வேதம் பற்றியும், ஆயுர்வேதத்தில் பசும்பாலின் இயற்கையான குணங்கள், சிறப்பு பற்றியும், அதிலும் குறிப்பாக, கறந்த காய்ச்சாமல் சாப்பிடுவதால் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றியும் அறிஞர்கள் கூறக்கேட்டோம். விஷமும் அமிர்தமாகும் அமிர்தமும் விஷமாகும் இறைவன் சங்கல்பத்தினால்,*

*''ஆகாயத்திலிருந்து மாலை விழுகிறது'' இந்தக்கட்டத்தில், மகாகவி காளிதாசன் ''பாலாக இருந்தாலும் பார்த்து பருகு'' என்று கருத்து. உணர்வு ரீதியாக ஆர்வம் மிகுதியில் நாம் தவறவிட்டதை, மீண்டும் பெறும் முயற்சியில்...*

*நம்பிக்கையை வலுப்படுத்த வேண்டும். சாஸ்திரங்களை பிரசாரம் செய்ய வேண்டும். அதே நேரத்தில் விவாதங்களை முழுமையாகத் தரவேண்டும்.*

*நம்முடைய ஆயுர்வேதம் மூலமாக ''கோ'' பற்றி கூறுவதை மிகக் கவனமாகக் கேட்டுக்கொள்ள வேண்டும். பழமையானவை, ரொம்ப பழசாயிருந்தாலும் நல்லதாகும் ஆதாரத்துடன் தெரிந்து கொள்ளவேண்டும். புதிது புதிது புதிதாக இருந்தாலும் சாஸ்திரத்துக்கு விரோதமில்லாமலிருந்தால் எடுத்துக் கொள்ளலாம்.*

*பழமையாக இருந்ததால், அங்கீகாரம் தருவது என்பது பரிட்சை செய்து மிக நேர்த்தியாக ஆக்கியது. (ஆயுர்வேதம் பற்றி ஒரு ஸ்லோகம்')*

தகப்பனாரே தன் மகனுக்கு பரீட்சை பரீட்சையாக வைத்து தேர்ச்சி செய்த காலம். இன்றைக்கு நாம் சொல்கிற ட்ரான்ஸ்பெரன்ஸி அந்த காலத்தில் எவ்வளவு மிக சரியாக இருந்திருக்கிறது என்பதை பார்க்க வேண்டும்.

பத்து பேருக்கு என்று இல்லை, இரண்டு பேருக்கே நடந்தாலும் வெளிப்படையாகவே நடந்தது. தற்போது போல, பிற்சேர்க்கை, என்றாகி அனுபந்தம் என்பது பண்டமாகி விட்டது. புராணம், புராதனம் முதலியன நேர்மையாக வெளியிடப்பட்டது. எனவே அதில் நம்பிக்கை வைத்து சாஸ்த்திர சம்பிரதாயங்களை, மூல வாக்கியங்கள் தெரியாவிட்டாலும் அதை சொல்பவை சொல்லுக்கும் செயலுக்கும் இலக்கணமான நிலையுள் நின்று சொன்னார்கள். இதை நம்மவர்கள் நல்லவர்கள் சீர்தூக்கிப் பார்த்து விட்டு தங்கத்தை சுத்தம் செய்து பயன் படுத்துவது போல பின்பற்றவேண்டும். இப்படி பல விஷயங்களை ஸ்லோகங்கள் மூலமாக வேதத்தை கதைகள் மூலமாக வேத விஷயங்களை ஸ்தோத்திர, பிரச்சன, பிரதி பிரச்சன, வர்ணனை செய்வதன் வாயிலாக அனைவருக்கும் போதிக்கப்பட்டது.

அரசர்கள் வானப்ரஸ்தத்தில் செல்லும் போது பொறுப்புகளை மந்திரியிடம் ஒப்புவித்து விட்டு, தூப ஸ்தம்பங்கள் மரக்கூட்டத்தில் இன்ன இன்ன இன்ன என்று சொல்லிக் கொண்டு போகிறார் .... புத்துருக்கு நெய் அவ்வப்போது பயன்படுத்தினோம்... காவியரூபமாக.. மரியாதை நீதி சாஸ்திரம், இயற்கை, மலை, சமுத்திர இந்திய நாகரீக ...காவியங்கள் மூலமாக வெளிப்பட்டு இருக்கிறது. மற்ற இந்திய காவியங்கள் (சமஸ்க்ருதம் etc) லலிதமாக பிறர் மனம் புண்படாதவாறு விஷயங்கள் சொல்லப்பட்டு உள்ளன. குறிப்பிட்டு இந்த ஊர் இந்த பேர் என்று ஸ்தல புராணங்கள் பல இடங்களில் காசிக்குத் துல்லியமாக சொல்லப்பட்டுள்ளது. அதே நேரத்தில் கங்கைக்கு தெற்கே கங்கைக்கு வடக்கே என்று குறிப்பிடப்பட்ட இடங்கள் national integration க்கு உதாரணமாக உள்ளன.

கோவில் தெரிகிறது. கட்டுமானம் தெரிகிறது.. ஐந்து நிலை .. ஏழு நிலை என்று ... இந்த கோவிலோடு தொடர்புடைய ரிஷி யாரு.. ராஜா யாரு பக்தர்கள் யார்கள் என்பதும்.. பக்தர்களுக்காக இறைவன் காட்சி தந்த விவரங்கள் ...... ஆவணி மூலம்.... சப்தஸ்நானம்.. மலையே சுவாமி என்ற திருவண்ணமாலை, கிரிப்ரதக்ஷணம் என்று பல விஷயங்களை புத்தகங்கள் வாயிலாக அறிகிறோம். சில செவி வழிச் செய்தியாகவும் உள்ளன.

கிடைத்ததை வைத்துக் கொண்டு தர்மத்தை செய்ய வேண்டி இருக்கிறது. துலா மாசம் என்று வந்தால் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஸ்தோத்திரம் படிக்க சொல்லுவார்கள்.

**மூன்றாவதாக நிர்வாங்கம்:**

வேதங்களை காப்பாற்ற கோசாலை, வேதபாராயணம் என்றும், சம்ஹிதா பாராயணம், ஜடா வல்லபர்களால் 'ஜடா விக்ருதி' என்கிற விக்ருதி பாராயணம். ருக் வேதம் எட்டு விதமான பாராயணம் உண்டு. கிருஷ்ண யஜுர் வேதமும் எட்டு வகையான பாராயணம் உண்டு. மாலை, ரசம் சமசங்கையாக த்விச்சக்ரம், சதுர்ச்சக்ரம் ....... அவரவர் வித்யையில் அவரவர் கவர வேண்டும்.

அஷ்ட விக்ரதுதிகள்.. ரேகா, மாலா ரதம் என்று சாஸ்திரத்தில் இருக்கிறது. பிரசாரத்தில் இலை. சிதம்பரத்தில் ஒரு பாராயணம் நடந்தது. ஒவ்வொரு எழுத்துக்கும், விரல், ரேகை, தெய்வம். சப்தம் நாபியில் உருவாகி எப்படி வெளிப்படுகிறது.

**நிதி நிர்வாகம் நியமம்**

ஒவ்வொரு மாவட்டத்திலேயும், பிரதேசத்திலும் ஒவ்வொரு விஷேசம் நடக்கிறது. சிவாலய ஓட்டம் என்று ஒன்று நடக்கிறது. திருவண்ணாமலையில் கிரிவலம் நடக்கிறது. சங்கராச்சாரியார் அந்தக் காலத்திலே இமயமலை உள்பட எல்லா மலைகளிலும் ஏறி வந்தார். இந்த ஊருக்கு வந்தார். மலையே ஏறலே. ஏனென்றால், மலையே சுவாமி என்ற அபிப்ராயத்தினாலே, அவர் பிரதட்சிணம் பண்ணினார் என்று. இப்படி பழையக் கோவில்களை தரிசனம் பண்றோம். இந்த மலையைப் பொருத்த வரைக்கும், மலையே ஸ்வாமியாக பாவிப்பதனாலே, கிரி பிரதக்ஷிணம், இந்த மாதிரி பிரதிக்ஷணம் பண்றோம்.

இப்படி பல விஷயங்களையும் புத்தகத்தில் பார்க்க முடிகிறது. சிலது செவிவழிச் செய்தியாக, அதற்கும் ஆதாரம் இருந்து இருக்கலாம். கிடைத்ததை வைத்துக் கொண்டு தான் இன்று தர்மத்தை வளர்க்க வேண்டிய நிலை இருக்கிறது. கிடைத்ததை வைத்து கொண்டு அது புஸ்தகமா இருக்கலாம், அனுகூலமாக இருக்கலாம், ஜடமா இருக்கலாம். எல்லாமே, கிடைத்ததை வைத்துக் கொண்டு தான் தர்மங்களை செய்ய வேண்டிய நிலை. சில ஸ்தல புராணங்கள் இருக்கின்றன.

அந்தக் காலத்திலே காய்கறிகளையெல்லாம் தானம் பண்ணி, பிரதட்சிணம் பண்ணி, எப்படி சத்திய நாராயண பூஜை பண்றாளோ, அது மாதிரி துலாமஹாத்மயம் படிக்கச் சொல்லி, ராம கிருஷ்ணா சாஸ்த்ரி அவர்கள் படித்திருந்தார். இல்லை என்றால் ஸ்தல புராணம் படித்தல், பத்ம புராணம், பிரம்மாண்ட புராணம், கருட புராணம், விஷ்ணு

புராணம், இதெல்லாம் பதினெட்டு புராணங்கள். காஞ்சி மகாத்மியம், காசி மகாத்மியம் எல்லாம் ஸ்தல புராணங்கள். ஸ்தல புராணங்களையும் நாம் முதலில் படிக்க வேண்டும் என்பதற்காக-ஸ்தல புராணம் படிக்கச் சொல்லி இருக்கார்கள். மூன்றாவதாக நிர்வாகம். கோ தானம் நிர்வாகம் செய்வது.

இதெல்லாம் உத்தேசங்கள். இந்த உத்தேசங்களை நடை முறைபடுத்துவது எப்படி? அதற்காக இந்த கோ சாலை, வேத பாராயணங்கள் எல்லாம் விடுபட்ட பாராயணங்கள்-சண்டிகா பாராயணம், மூல பாராயணம், ஜடா வல்லபர் என்று சொல்லி என்பது சில வருஷத்திற்கு முன்பாக ஜடாவல்லபர் என்று சிதம்பரத்தில் பேர். திருவிடைமருதூரில் சிலபேர், ன்னொருத்தர் கோபால ஐயர் என்று ஒருவர், காஞ்சிபுரத்திலே. இன்னொரு ஜடாவல்லபர் ஜடா என்பது வேதத்தினுடைய ஜடா என்று வ்ருகுதி பாடம், நன்றாகப் படித்தவர்கள்.

இப்ப இவர் என்ன பண்ணிருக்கார்னா, ரிக் வேதத்தை பொருத்த வரையில், ஏழு எட்டு விதமான வேத பாராயண முறை இருக்கு. யஜீர் வேதத்திலே நாலு. ரிக் வேதத்திலே எட்டு. ரிக் வேதத்திற்கும், யஜுர் வேதத்திற்கும் பதம், ஜடம், க்ரமம். கணம். இதை தவிர்த்து ரிக் வேதத்திலே மாலா, பலம், ரேக்ஹா , கண்டம் என்று பிரித்து இருக்கு. மந்திரங்களை இப்படிச் சொல்வது, தலைகீழாகச் சொல்வது. இங்கிருந்து இரண்டு பதம், அங்கிருந்து இரண்டு பதம், அதையெல்லாம் சேர்த்து சொல்லுதல். இரட்டைப்படை பாடங்களை உடைய மந்திரங்கள் பதினெட்டு, பதினான்கு என்ற விதமாக இருக்கக் கூடிய மந்திரங்களைச் சொல்வது.

சதுர்சக்ர ரதம், சக்கரத்துடன் கூடிய ரதம். மகா பெரிய சக்கிரத்துடன் கூடிய ரதம். இப்படியெல்லாம் இருக்கின்றன. ஞாபக சக்திக்கு. Competition-இந்தப் பக்கத்தில் இருந்து ஒருவர் சொல்லும் போது , அந்தப் பக்கத்தில் இருந்து ஒருவர் சொல்லனும், அதுவும் நிறைய பேர் சொல்லிக் கொண்டு வருகிறார்கள்,

இதே மாதிரி இன்னொன்று இருக்கு- ஒன்னு, இரண்டு; இரண்டு, மூணு மூணு நாலு; நாலு, மூணு இரண்டு, ஒன்று; என்று சொல்லி வருவது. தப்பா சொன்னா, பக்கத்தில் இருக்கிறவா இடிக்கிறார்கள், எனவே கவனமாக சொல்லணும் என்று சொல்லி. இதுமாதிரி எல்லாம் இருக்கு-concentration. அவரவர்களுக்கு, இருக்கும் வித்தையில், அவரவர்களுக்கு கவனம் வேண்டும். வித்தை என்பது ஒரு வரம். அதில் கவனம் இருக்க வேண்டும். அதற்காகத்தான் இந்த விதிகள். இதெல்லாம் சாஸ்திரத்தில் இருக்கிறது. ஆனால், சம்சாரத்தில் இல்லை. Practiceல் இல்லை. அதற்காக, practice செய்யணும்

என்ற முயற்சியில் ஈடுபட்டு அதே மாதிரி ஸ்ரீ ருத்ரம், பாராயணம்,- அதற்கெல்லாம் ஒரு program நடத்தி- எல்லா எழுத்துக்கும் ஒரு different-எழுத்தைச் சொல்லும் போது- இந்த எழுத்தைச் சொல்லும் போது இங்கே நிறுத்தப் பட வேண்டும், இந்த எழுத்தைச் சொல்லும் போது இப்படி, ஒவ்வொரு எழுத்துக்கும் உரிய தேவதைகள்-சந்திரன், சூரியன், அக்னி, வாயு இது போன்ற, ஒவ்வொரு எழுத்திற்கும் ஒவ்வொரு தெய்வம் என்று இருக்கு.

அதை எல்லாம் சொல்லி, சொல்லக்கூடிய உச்சாரணம்- பரை, பஷ்யந்தி, மத்திமை, வைகரி என்பன. இந்த சப்தமானது நாபியிலிருந்து உருவாகி, எப்படி வெளிப்படுகிறது - வைகரி. அந்த மாதிரி எழுத்துக்கள்- பல்லு பட்டு வருதா, படாமல் வருதா, சாதாரண முயற்சியுடன் வருகிறதா அழுத்தம் கொடுத்து வருகிறதா, அழுத்தம் கொடுப்பது என்று சொல்கிறார்களே, மறுபடியும் சொல்லுங்கோ, மறுபடியும் ஞாபகப்படுத்துங்கோ என்று சொல்கிறார்களே, சாதரணாமாக சொல்லாமல், அழுத்தம் திருத்தமாகச் சொல்லுங்கோ என்று சொல்றாளே, எழுத்தை வைத்துக்கொண்டு, அந்தக்கரணம், ஆகரணம், தா, த, ட, டா அதெல்லாம் நமக்கு ஸூத்தி-ருத்ர ப்ரஸ்ணத்திற்கு ருத்ர அத்யாயத்திற்கு முழுவதுமாக, அந்தப் பாராயணத்தையும் சேர்த்துண்டா சிதம்பர க்ஷேத்திரத்திலே, விசேஷமா பாராயணம் சேர்த்துண்டா, பொதுவா என்ன பண்ணிண்டு இருக்கோன்னா- வித்தைகளை ரட்சிக்கனும், வித்வான்களை போஷிக்கணும். எங்காவது ஒரு program ஏற்படுத்திக் கொடுத்து, இன்னைக்கு இருக்கிற சௌகரியங்களை வைத்துண்டு, விடுபட்டுப் போன பல வேத பாராயணங்களை உற்சாகப்படுத்திக் கொண்டு, கோ சாலை நிர்வாகத்தைப் பற்றியும் சொல்லி. மூன்று முக்கியம் நிதி, நிர்வாகம், நியமம்-இன்று ஸ்தல புராணம், உச்சாரணம், கோ சம்ரக்ஷணம் பற்றி சொல்லி, நாளை, ஆலயம் பற்றி, ஆலய நிர்வாகம் பற்றி, நாளை காலையில் திருமுறை, பன்னிரு திருமுறை பற்றி - சோபன் சித்தாந்தம் என்று உண்டு. பிரம்ம சூத்திரம் எல்லாம் சித்தாந்தம். சிவானந்த லஹரி, சௌந்தர்ய லஹரி எல்லாம் ஸ்தோத்திரம். அதே மாதிரி சித்தாந்தத்தை பற்றிய ஸ்தோத்திரங்கள், பன்னிருண்டு திருமறைகள், அதைப் பற்றி நிகழ்ச்சி நாளை காலையிலேயும். சீர்காழியிலே இருந்து ஞான சம்பந்தர் இல்லம் பாட சாலையிலே இருந்து வர இருக்கிறார்கள். ஆக, தேவாரமும், உபன்யாசங்களும், ஆகமங்களும், சம்ஸ்க்ருதமும் எல்லாம் சேர்ந்து நடைபெற இருக்கின்றன.

ஹர ஹர சங்கர, ஜெய ஜெய சங்கர

# தமிழ் பாகவதம்

தொகுப்பு : வீராபுரம் சம்பத் தீக்ஷிதர்

## ஸ்ரீ க்ருஷ்ணவதாரம்

39. கின்னரர்களும், கந்தர்வர்களும் இசைத்தனர். ஸித்தர்களும், சாரணர்களும் மகிழ்ந்தனர். வித்யாதரர்களும், அப்ஸரஸுகளும் ஆடினர். நித்ய ஸூரிகளும், தேவர்களும் மகிழ்வோடு நறுமண மலர்கள் தூவினர். மேகம் மெதுவாக கர்ஜித்தது. இறங்கி வந்து கடலின் மீது இரைச்சலிட்டது.

40. சரியாக இருள்நிறைந்த நடுநிசியில் எம்பெருமான் தேவவடிவு கொண்ட தேவகியிடம், அகில உலகுயிர்களின் இதய குஹையில் வாழும் எம்பெருமான் கீழ்த்திசையில் சந்திரன் தோன்றுவது போல் தோன்றினான். (ஸ்ரீமத் பாகவதம்)

## விஷ்ணுபுராணம்

41. கடல்கள் உண்மை ஒலியால் (இயல்பான ஓசை) வாத்யம் வாசித்தன. கந்தர்வ நாட்டினர் இசைத்தனர். அப்ஸரஸ்கள் கூட்டம் ஆடினர். மேகங்கள் இலேசாக கர்ஜித்தன. அந்தணர்கள் பூமாரி பொழிந்தனர். பாதி இரவில் அகில உலகத்தைத் தாங்கும் மக்களின் பிறவித்துயர் அகற்றும் ஜனார்தனன் பிறந்தபோது.

42. **ஹரிவம்சம் :** எம்பெருமான் அபிஜித் முகூர்த்தம் (நண்பகல் 12 மணியும் நடு இரவு 12 மணியும் அபிஜித் காலம்) நடு இரவில் அவதரிக்க கடல்கள் சீராக அசைந்தன. மலைகள் எல்லாம் அசைய, அக்னி அமைதியாக ஒளிவிட்டது. காற்று குளுமையாக வீசியது. அமைதியிலாழ்ந்தது மண். விண்மீன்கள் ஒளிவிட்டன. ஹரியாகிய குழந்தையைப் பார்த்த வசுதேவர், கண்ணன் அவதரித்த மகிழ்ச்சியில் அந்தணர்களுக்கு பத்தாயிரம் பசுக்களை (மானஸீகமாக தானம்) கொடுத்தார். - அக்குழவியை, தெளிந்த அறிவுடன், கைகூப்பி, பிரசவ அறையிலிருந்து எடுத்து அந்தக் குழந்தையின் அழகிய ஒளியில், பயமற்றவராய் இருந்தார்.

43. **யாதவாப்யுதயம் :** தூய லக்னத்தில் ஐந்து க்ரஹங்கள் உச்சநிலையில் உள்ளபோது குற்றமே இல்லாத ஜயந்தியில் (அஷ்டமியும் ரோஹிணியும்) அகில உலக துன்பமெனும் இருளைப்போக்கி, ஒப்பற்ற ஒரு சூரியன் தேவகியின் வயிற்றில் பிறந்தான்.

44. மெய்யறிவின் வடிவே வணக்கம். ஒப்பற்ற உயர் துன்பமே வணக்கம் கரியவனே. கோயில்களின் (ஆயர்பாடிப் பெண்கள் நாதனே! நமஸ்காரம் கோவிந்தா உனக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.

45. தாமரைக் கண்ணனே நமஸ்காரம். தாமரை மாலையை உடையவனே நமஸ்காரம். கொப்பூழில் தாமரையை உடையவளே நமஸ்காரம். கமலையாம் திருவின் நாயகனே நமஸ்காரம்.

46. அந்த அற்புதமான குழந்தையை, நான்கு திருக்கரங்களுடன் சங்கம், சக்கரம், கதை, கத்தி ஆகிய ஆயுதங்களுடன், ஸ்ரீ வத்ஸம் எனும் மரு கழுத்தில் துளங்கிய கௌஸ்துபம், பீதகவாடை பூரணநிலை ஒத்த மகிழ்ச்சி தரும். உயர்ந்த வைடூரிய மகுடம், குண்டலங்கள், வளைந்த (சுருள் சுருளான) கேசம், ஒளிரும் பொன்னாலான கைவனை (வங்கி புஜத்தில் தரிப்பது).

47. ஆச்சரியத்தால் மலர்ந்து கண்களுடன் ஸாக்ஷாத் ஹரியாகிய குழந்தையைப் பார்த்த வசுதேவர், கண்ணன் அவதரித்த மகிழ்ச்சியில் அந்தணர்களுக்கு பத்தாயிரம் பசுக்களை (மானஸீகமாக தானம்) கொடுத்தார். அக்குழவியை தெளிந்த அறிவுடன், கைகூப்பி பிரசவ அறையிலிருந்து எடுத்து அந்தக் குழந்தையின் அழகிய ஒளியில் பயமற்றவளாய் இருந்தார்.

48. **பெரியாழ்வார் அனுபவம் :** இந்த க்ருஷ்ணாவதாரத்திலும் ஸ்ரீ க்ருஷ்ண லீலையிலும் தன்னெஞ்சைப் பறிகொடுத்தவர் பெரியாழ்வார். அவரது ஆனந்தத்தின் எல்லையை விவரிக்கும் பாசுரங்கள்.

வண்ண மாடங்கள் சூழ்திருக்கோட்டியூர்
கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில்
எண்ணெய் சுண்ணம் எதிரெதிர் தூவிட
கண்ணன் முற்றம் கலந்து அளறாயிற்றே (அளறு - சேறு)

ஓடுவார் விழுவார் உகந்தாலிப்பார்
நாடுவார் நம்பிரான் எங்குற்றானென்பார்
பாடுவார்களும் பல்பறை கொட்ட நின்று
ஆடுவார்களும் ஆயிற்று ஆயப்பாடியே

(தொடரும்)

# கார்த்திகை மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| | | |
|---|---|---|
| *15/11/2020* | ஞாயிறு | அனுஷம்தேர் |
| *16/11/2020* | திங்கள் | அனுஷம் பாராயணம் |
| *17/11/2020* | செவ்வாய் | காவேரிமுடவன் முழுக்கு |
| *17/11/2020* | செவ்வாய் | மூலம் தேர் |
| *19/11/2020* | வியாழன் | உத்ராடம் தேர் |
| *19/11/2020* | வியாழன் | உத்ராடம் பாராயணம் |
| *20/11/2020* | வெள்ளி | ஸ்கந்தஷஷ்டி, சூரஸம்ஹாரம் |
| *21/11/2020* | சனி | அவிட்டம்தேர் |
| *22/11/2020* | ஞாயிறு | அவிட்டம்பாராயணம் |
| *25/11/2020* | புதன் | ஏகாதசி |
| *26/11/2020* | வியாழன் | ப்ருந்தாவன த்வாதசி,<br>துளசி விவாஹம், |
| *27/11/2020* | வெள்ளி | ப்ரதோஷபூஜை |
| *28/11/2020* | சனி | பரணிதீபம் |
| *29/11/2020* | ஞாயிறு | பௌர்ணமி பூஜை,<br>கார்த்திகைதீபம், சர்வாலய தீபம் |
| *11/12/2020* | வெள்ளி | ஏகாதசி |
| *12/12/2020* | சனி | துவாதசி, சனிமஹாப்ரதோஷம் |
| *13/12/2020* | ஞாயிறு | அனுஷம்தேர் |
| *13/12/2020* | ஞாயிறு | அனுஷம் பாராயணம் |
| *20/11/2020, 27/11/2020, 04/12/2020 - 11/12/2020* வெள்ளிக்கிழமை பூஜை | | |
| | | |
| | | |

# ஸ்ரீமத் தேவி பாகவதம் - 8

*பி. ஆர். கண்ணன்*



## ஸத்யவ்ரத சரித்திரம்

*தேவியின் அதீத கருணை ஸத்யவ்ரதனுக்கு கிட்டிய காரணம், அவன், பன்றி உள்ளே நுழைந்ததும், அய் என்று சாதாரணமாகக் கத்தியதை, தேவி 'ஐம்' என்ற வாக்பீஜாக்ஷரத்தை அவன் சொன்னதாக எடுத்துக்கொண்டு அனுக்ரகத்தை வாரி வழங்கியது தான். ஏற்கெனவே, ஸத்தியவ்ரதனாக இருந்தான்; கோபில மஹரிஷியின் அனுக்ரகம் பலிக்கும் காலமும் வந்தது.* **'ஐம்' என்பது வாக்சக்தியை அளிக்கக்கூடியது. ஸாரஸ்வத பீஜம். தேவிபக்தர்களுள் சிறந்தவரான துர்வாஸர் தன்னுடைய சக்திமஹிம்ன ஸ்தோத்திரத்தில் இந்த பீஜாக்ஷரத்தை வெகுவாகப் புகழ்ந்து மோக்ஷத்தையே தரவல்லது என்கிறார். சதுர்வேத ஸங்கேத ஸாரம் என்றும் இந்த பீஜத்தைப் போற்றுகிறார்கள்.** *அதாவது, ரிக்வேத ஆரம்ப மந்திரம் 'அக்னிமீளே' என்பதின் முதல் அக்ஷரம் 'அ' வாகும். யஜுர்வேத மந்திரம் 'இஷேத்வா' வின் முதல் அக்ஷரம் 'இ' ஆகும். ஸாமவேதத்தின் ஆரம்பம் 'அக்ன ஆயாஹி' மந்திரத்தின் முதல் அக்ஷரம் 'அ'வாகும். இந்த மூன்று முதல் அக்ஷரங்களும் ஸம்ஸ்க்ருத இலக்கணப்படி சேரும்போது, அ+இ= ஏ; ஏ+அ = ஐ என்று ஆகிறது. 'ஐ'யோடு அர்த்தமாத்திரையை (ம்) சேர்க்கும்போது 'ஐம்' என்ற பீஜம் உருவாகிறபடியினால், அதனை நான்குவேத ஸாரம் என்று கூறி ஸ்துதிக்கிறார்கள்.*

## ஸுதர்சன சரித்திரம்

*தேவியின் பீஜாக்ஷர மஹிமையை விளக்கும் இன்னொரு கதை. அயோத்தியின் இக்ஷ்வாகு ராஜவம்சத்தில், அதாவது ஸ்ரீராமபிரானுக்குப் பின் அவருடைய வம்சத்தில் உதித்த த்ருவஸந்தி என்கிற ராஜாவிடம் ஆரம்பிக்கிறது. த்ருவஸந்திக்கு இரு மனைவிகள் - மனோரமா, லீலாவதி இருந்தனர். மனோரமாவுக்கு ஸுதர்சனன் என்ற புத்திரன் பிறந்த ஒரு மாதம் கழித்து, லீலாவதிக்குப் பிறந்தவன் சத்ருஜித். ராஜா த்ருவஸந்தி காட்டில் வேட்டையின்போது மரணமடைந்ததையொட்டி, வஸிஷ்டரின் ஆணைப்படி, பாலகனான ஸுதர்சனனை ராஜாவாக்கினர். லீலாவதியின் பிதா உஜ்ஜயினி ராஜா யுதாஜித்திற்கு இது பிடிக்கவில்லை. அவன் மனோரமாவின் பிதா, கலிங்கராஜா வீரசேனனுடன் கடும் யுத்தம் செய்தான். யுத்தத்தில் வீரசேனன் மடிந்தான். மனோரமா இப்போது லோபியான யுதாஜித்தினால் தன் புத்திரன் ஸுதர்சனனுக்கு ஆபத்து நேரிடும் என்று பயந்தாள். லோபி என்னதான் செய்யான்?* **பிதரம் மாதரம்**

***ப்ராத்ரூந்குரூந் ஸ்வஜநபாந்தவாந் । ஹந்தி லோபஸமாவிஷ்டோ ஜநோ நாத்ர விசாரணா ந லோபி, பெற்ற தாயார், தகப்பனார், குருமார்கள், பந்துக்கள் என்று பாராமல் அவர்களைக் கொல்லத் தயங்கமாட்டான்*** *என்று முடிவு செய்து, தன் புத்திரன் ஸுதர்சனன், நம்பிக்கைக்குகந்த மந்திரி ஒருவன், தாஸி ஆகியோருடன் யுத்தபூமிக்கு வீரசேனனின் சடலத்தைப் பார்க்குமுகமாகக் கிளம்பிச்சென்று, அங்கிருந்து தப்பி ஓடினாள். கங்கைக்கரையில் கொள்ளைக்காரர்கள் அவளுடைய ரதம், இருந்த கொஞ்சப்பணம் எல்லாவற்றையும் திருடிச் சென்றனர். எப்படியோ கஷ்டப்பட்டு, கங்கையைக் கடந்து பாரத்வாஜ மஹரிஷி வழி வந்த சிஷ்யர்களின் ஆசிரமம் வந்துசேர்ந்து, அடைக்கலம் அடைந்தாள். இதற்கிடையில் யுதாஜித் தன் பேரன் சத்ருஜித்தை ராஜாவாக்கிவிட்டு, இந்த ஆசிரமத்திற்கு ஸுதர்சனனை அழிப்பதற்காக வந்தான். அங்கிருந்த ரிஷிகள் ஸுதர்சனனைக் காப்பாற்ற முன் வந்ததால், ரிஷிசாபத்திற்கு பயந்து திரும்பினான்.*

*ஸுதர்சனன் 5 வது வயதில் காட்டில் தற்செயலாக யாரோ இருவர் பேசுகையில் கேட்ட சப்தம் 'க்லீம்' என்றாற்போல் தோன்றியது. அது அவனுக்கு மிகவும் பிடித்துப் போகவே, திரும்பத் திரும்ப 'க்லீம்' 'க்லீம்' என்றே சொல்லிக்கொண்டிருந்தான். 11வது வயதில் உபநயனம் ஆகி, வேதாத்யயனம், வில் வித்தை எல்லாம் கற்றான். தேவி ஒரு நாள் அவனுடைய* ***'க்லீம்' மந்திர ஜபத்தினால் வெகு சந்தோஷப்பட்டு, வைஷ்ணவி ரூபத்தில் நேரே தரிசனம் தந்து, வில், அம்பு, கவசம், அம்பறாத்தூணி எல்லாம் அருளினாள். 'க்லீம்' பீஜாக்ஷரம் லக்ஷ்மி பீஜம் என்று போற்றப்படுகிறது. க தர்மத்தையும், ல அர்த்தத்தையும், ஈ காமத்தையும், பிந்து மோக்ஷத்தையும் குறிப்பதால், சதுர்வித புருஷார்த்தங்களையும் வழங்கவல்லது.*** *கொஞ்ச காலங்கழித்து, காசிராஜா ஸுபாஹுவின் புத்திரி சசிகலா ஸுதர்சனனைப்பற்றிக் கேள்விப்பட்டு அவனையே விவாகம் செய்ய ஆசை கொண்டாள். அவளும் தேவி பக்தை. அவளை ஸ்வப்னத்தில் ஸுதர்சனனையே வரிக்குமாறு தேவி கூறினாள். அவ்வாறே ஸுதர்சனனுடைய ஸ்வப்னத்திலும் தேவி அருளினாள். ஸுபாஹு தன் புத்திரிக்கு சுயம்வரம் ஏற்பாடு செய்ய முற்பட்டபோது, சசிகலா ஒரு பிராம்மணர் மூலம் ஸுதர்சனனுக்கு செய்தி அனுப்பினாள். ஸுதர்சனன் உடனே காசிக்குக் கிளம்பினான். யுதாஜித்தும் சத்ருஜித்தும் காசிக்கு நிச்சயமாக வருவார்கள், ஸுதர்சனனுக்கு ஆபத்து ஏற்படும் என்று பயந்த தாயார் மனோரமா தேவி கவசத்தை சொல்லி ஸுதர்சனனுக்கு காப்பு உண்டாக்கினாள்.* ***அக்ரதஸ்தே அம்பிகா பாது பார்வதீ பாது ப்ருஷ்டதஃ । ...... ஸர்வதா ஸர்வதேஸேஷு பாது த்வாம் புவநேஸ்வரீ । மஹாமாயா ஜகத்தாத்ரீ ஸச்சிதானந்தரூபிணீ ।*** *என்று. கவசம் அணிவித்தும், மனோரமா பயத்தினால் தானும் கூடவே காசிக்குச் சென்றாள்.*

*(வளரும்)*

# ஆசாரமும், ஒழுக்கமும்

ஆசாரம், ஒழுக்கம் இவை இரண்டும் ஒரே பொருளைக் குறிக்கும். ஆசாரமென்பது நம் முன்னோர்களின் நல்லொழுக்கத்தைக் குறிக்கும். இத்தகைய நல்லொழுக்க முள்ளவர்களைப் பார்த்து ரிஷிகளும் புகழ்கின்றனர்.

'ஆசாரத்தால் நீண்ட ஆயுளை அடையலாம், ஆசாரத்தால் நாம் விரும்பும் பிரஜைகளை அடையலாம். ஆசாரத்தால் அழிவற்ற தனம் பெறலாம்; ஆசாரம் அலஷ்மியைத் தடுக்கும். கெட்ட ஒழுக்கமுள்ளவன் உலகத்தில் நிந்திக்கப்படுவான்; அவன் எப்போதும் துக்கத்தையடைந்து வியாதியுள்ளவனாகவும் ஆவான்' என்று மனு ஸ்ம்ருதியில் கூறப்பட்டிருக்கிறது. ஒருவன் ஆசாரமில்லாமல் எவ்வளவு கற்றவனாக இருந்த போதிலும் அவனை யாரும் மதிப்பதில்லையென்பது நிச்சயமான அனுபவம், மண்டையோட்டிலுள்ள தண்ணீரும், தோலால் செய்த பையிலிருக்கும் பாலும் எவ்விதம் பாத்திரத்தின் தோஷத்தால் கெட்டுவிடுகின்றனவோ, அவ்விதமே ஆசாரமில்லாதவன் அனுஷ்டிக்கும் விரதம், நியமம், உபவாஸம் முதலியன பிரயோஜனமற்றவையாகி விடுகின்றன.

'சௌரியம், வீர்யம், குணம், தவம், ஞானம், ஆசாரம் இவை இல்லாத புத்திரன் புத்திரனல்ல. தாயின் மலமூத்திரங்களுக்கு ஸமானமாளவன் ' என்பது பிருஹஸ்பதி வாக்யம்.

ஸ்ரீ கிருஷ்ண பகவான் கீதையில், '' வர்ணங்களுக்கும் ஆச்ரமங்களுக்கும் எல்லை என்னால் வகுக்கப்பட்டிருக்கிறது; அதை சரிவர அனுஷ்டிப்பவர்களிடத்திலேயே எனக்குப் பிரீதியிருக்கும் ' என்று கூறியிருக்கிறார்.

இவ்விதம் ஆசாரத்தை அனுஷ்டிப்பவன் அடையும் பிரயோஜனங்களைப்பற்றி நாதர் கூறுகிறார்!

நெல் வயலுக்கிறைத்த நீர் எவ்விதம் வழியிலுள்ள புல் பூண்டுகளையும் வளர்க்கிறதோ, அவ்விதமே தர்ம மார்க்கத்தில் வழுவாமல் செல்லும் மனிதன் மோக்ஷத்தை அடைவதோடு, இம்மையிலும் கீர்த்தி, தனம், தான்யம் மற்றும் தான் விரும்பும் அனைத்தையும் அடைகிறான், ஆசாரமில்லாதவன் ஜன்மம் வீணே. அவனுக்கு இஹத்திலும் பரத்திலும் சுகம் கிடைக்காது என்பதே நம் சாஸ்திரங்களின் ஸித்தாந்தம்.

தோஷமற்றவர்கள் தான் 'ஸத்' எனப்படுவர். 'ஸத்'' என்றால் நல்லது என்று பொருள். 'ஸத் ''துக்களின் நடத்தையே ஸதாசாரமெனப்படும். எந்தத் தேசத்தில் எந்த

ஆசாரமானது பரம்பரையாக ஸாதுக்களால் தர்மசாஸ்திரங்களுக்கு விரோதமில்லாமல அனுஷ்டிக்கப்பட்டு வருகிறதோ அதே ஸதாசாரமாகும்.

நம் முன்னோர்களின் தேகம் பரிசுத்தமானது. அவர்களிடத்தில் தவறு ஏதாவது ஏற்பட்டாலும் அது தாமரையிலையில் ஜலம் போல் அவர்களிடம் ஒட்டாது. உதாரணமாக ஒரு பெரிய காட்டுத் தீ, பக்கத்தில் ஒரு நதி, அதனருகில் ஒரு சிறிய குட்டை இவை மூன்றுமிருப்பதாக வைத்துக் கொள்ளுவோம். ஒரு பெரிய காற்றடித்துக் குப்பைகளை கொண்டுவந்து தள்ளிற்று. காட்டுத் தீ அக்குப்பைகளையும் சேர்த்து எரித்து இன்னும் பலமடைந்தது. நதி தன் வெள்ளத்தில் குப்பைகளை அடித்துக் கொண்டு போய்ச் சமுத்திரத்தில் தள்ளிவிட்டது. ஆனால் சிறு குட்டையோ குப்பைகளால் மூடப்பட்டு அதிலிருந்த கொஞ்சம் ஜலமும் வற்றிவிட்டது. இதுபோல் தவ வலிமையுள்ளவர்களிடம் ஏதாவது குற்றம் இருந்தாலும் அது அவர்களைப் பாதிக்காது. ஆனால் தவவலிமையற்ற நாம் அவ்வழியைப் பின்பற்றினால் நமக்குக் குட்டைக்கான கதிதான். பரமசிவன் கொடிய விஷத்தையுண்டார், அது அவரை ஒன்றும் செய்யவில்லை நாமும் அப்படிச் செய்தால் நம் கதியென்ன?

நாம் எவை எவற்றைப் பின்பற்ற வேண்டுமென்பதற்கு நமக்கு ஒரு வழிகாட்டி வேண்டும். இவ்வழிகளை நம் முன்னோர்களான மஹரிஷிகள் தங்கள் தவத்தின் மஹிமையால் கண்டறிந்து நமக்குச் சாஸ்திரரூபமாக அளித்திருக்கிறார்கள். அவற்றை நாம் நன்கு ஆராய்ந்து அவற்றின் விஷயங்களை நன்றாகத் தெரிந்து கொண்டு அதன்படி நடக்காமல், ‘ இவையெல்லாம் பண்டைக் காலத்துக் கதைகள், நமது முன்னேற்றத்திற்கு இவை தடை, இவையெல்லாம் சமையல் அறை ஆசாரம், Kichen religion" (Sri Nehru - Speech on Hindu Code Bill 2-10-1951.) என்றெல்லாம் வாதித்துப் புறக்கணிப்பது நமது பேதமையையே காட்டும்.

ஆசாரமென்பது ஸ்நானம் செய்து உலர்ந்த வஸ்திரம் தரிப்பது மாத்திரமல்ல. அதில் சுத்தி, சிரத்தை, பக்தி இவை யாவும் அடங்கி இருக்கின்றன. சுத்தியென்பது வெளியில் தோன்றுவது உள்ளுக்குள் மனத்தில் தோன்றுவது என இருவகைப்படும்.

ஸ்நானம் முக்கியமாகத் தேக சுத்திக்காக ஏற்பட்டது. சுத்தமான தண்ணீரில், நதியிருந்தால் நதியில், அல்லது சுத்தமான குளம், ஏரி இவற்றில், இவைகள் ஒன்றுமில்லாவிட்டால் கிணற்றில் ஸ்நானம் செய்ய வேண்டும்.

(தொடரும்)

# தொன்மையான இந்து மதம்

*ஸ்ரீ காஞ்சீ ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அருளுரை*

*(காஞ்சீபுரம் எஸ். எஸ். கே. வி. பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் உள்ள தட்சிணாமூர்த்தி அரங்கில் இந்துசமய மன்றத்தின் மாநில மகாநாடு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் முன்னிலையில் ஆரம்பமாயிற்று. மகாநாட்டில் ஸ்ரீ ஸ்வாமிகள் பேசுகையில், தொன்மையான இந்து மதத்தின் பெருமையைத் தெளிவாக விளக்கிக் கூறினார்கள்.)*

*'மாநாட்டினாலும் விளம்பரத்தினாலும், பிரசாரத்தினாலும் வளரும் மதம் இல்லை நம்முடைய இந்து மதம், தனிப்பட்ட முறையில் யாவரும் அறநெறியுடனும், நல்லொழுக்கத்துடனும் வாழ்க்கை நடத்துவதன் மூலந்தான் நம் சமயத்திற்கு ஏற்பட்டிருக்கும் துர்ப்பலம் நீங்கி, மதமும் மனிதனும் ஓங்கி வளர முடியும். எந்தச் சமயமும் பிறரால் அழியாது.*

*நற்பண்புகளைக் கடைப்பிடிக்கத் தவறுவதால் தான் பலக்குறைவு ஏற்படும். பிற மதங்களைப் போல நமது இந்து சமயம் ஒருவரால், ஒரு நாளில் ஏற்படுத்தப்பட்டது இல்லை. அனாதி காலமாக உலகம் தோன்றியது முதல் உள்ள மதம் இது. நம் மதத்தை ஒற்றை அடிப்பாதைக்கு ஒப்பிடலாம். ஒற்றை அடிப்பாதை பெரியசாலைகள் மாதிரி அமைக்கப்பட்டது இல்லை. ஒற்றை அடிப் பாதை குறுக்குப் பாதை இல்லை. ஆனால் சுருக்குப் பாதை. பெரிய சாலைகள் நடமாட்டம் அதிகமாக அதிகமாகத் தேய்ந்து வீணாகிவிடும். ஒற்றை அடிப் பாதை நடக்க நடக்கப் பளபளப்பாக, சுத்தமாக இருக்கும். நமக்கு முன்பு பல பேர் நடந்து அனுபவமான சுருக்குப் பாதையாகும் ஒற்றை அடிப்பாதை: அதன் வழியே நாம் தைரியமாகச் சென்று முன்னேற்றம் காணலாம்.*

*நம் மதம் ஒருவரால் ஒருநாளில் ஏற்படத்தப்படாததால் ஒருநாளும் அழியாது. ஆனால் சில சமயம் சூரியனை மேகம் மறைப்பது போல் மறைவு ஏற்படும். மேகம் மறைப்பதால் சூரியன் அழிவதில்லை. மப்பு விலகினால் மீண்டும் ஒளியுடன் பிரகாசிக்கும். மேகம் மறைத்திருக்கும் போது சூரியனைப் பார்த்துவிட்டுச் சூரியன் அழித்துவிட்டது; அல்லது அழிந்துவிடும் என்று சொல்லுவதுபோல் சிலர்-நம் மதத்தைப்பற்றிக் குருடன் யானையைப் பார்ப்பதுபோல்-குறை கூறுகிறார்கள். ஆதிசங்கரர் எல்லோரும் உய்ய வழிகாட்டியவர். சங்கரர் ஒருவர் தான் எதிலும் கடவுளைக் காணவேண்டும் என்றும் கூறியுள்ளார். மனிதனில் தெய்வத்தைப் பார்க்கவேணும் என்றும் கூறியிருக்கிறார். எல்லாவற்றிலும் இறைவனைக் காணலாம் என்று கூறியுள்ளார் ஆதிசங்கரர் அவரவர் தம் தம் மதத்தை அனுஷ்டிப்பது மூலம் கடவுளை அடைய முடியும் என்றும் கூறியுள்ளார்.*

## சமய மன்றங்கள் நற்பணிக்காக

'இம்மாநில மாநாடு பலர் கலந்து உரையாட, ஆலோசனை செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சர்ச்சைக்கோ விவாதத்திற்காகவோ இல்லை, மப்பும் மந்தாரமும் ஏற்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் மக்கள் தைரியமிழக்காமல் இருப்பதற்காகவும், நம்மை நாம் சீர்திருத்திக் கொள்வதற்காகவும், நம்மை நாம் புனிதமாக்கிக் கொள்வதற்காகவும் கோவிலுக்குப் போய்க் கடவுளிடம் நாம் பிரார்த்தனை செய்கிறோம், அழுகிறோம். கடவுள் அதற்காக நம்மிடம் கோபித்துக் கொள்வதில்ல. கடவுளிடம் நாம் குறைகளை நிவர்த்திக்க வற்புறுத்திக் கேட்கிறோம். ஆனால் கடவுள் அமைதியாகக் கேட்டுக்கொண்டு நமக்குப் பொறுமையை அளிப்பார். சமய மன்றங்கள் நற்பணி புரிவதற்காக ஏற்பட்டிருக்கின்றன. நம்மால் இயன்ற அளவு பிறருக்கு உதவியாக இருக்க வேண்டும். உள்ளத்தால், உடலால், பொருளால், ஆவியால் பரோபகாரமாக வாழ முயலவேண்டும். நம் பண்டைய மகரிஷிகள் தமக்காக வாழவில்லை. உலக க்ஷேமத்திற்காகத் தவம் இருந்தார்கள். அவர்களைப் பற்றி நன்கு தெரிந்து கொள்ளாமல் சிலர் தவறாகக் கருதுகிறார்கள்.

பெரியவர்களும் மகான்களும் தமக்காக வாழவில்லை. உலகம் உய்யவே பாடுபடுபவர்கள். 'ஸ்ரீ காமாக்ஷித் தாய் அருளாலும், ஸ்ரீ ஏகாம்ரேசுவர ஸ்வாமி அருளாலும் நாடும் நாமும் நலம் பெற இறை அருளப் பெற்று வாழ்வோமாக!'

சுவாமிகளின் அருளுரைக்கு முன் மாநாட்டின் பூர்வாங்கமாக நான்கு ராஜவீதிகள் வழியாக, தமிழ் நாடெங்குமிருந்து வந்துள்ள சமய மன்ற உறுப்பினர்கள் ஊர்வலமாக வந்தார்கள். கொடி வணக்கத்தில் ஸ்ரீ சுவாமிகளும் கலந்து கொண்டார்கள்.

இறை வணக்கத்துடன் மாநாடு ஆரம்பமாயிற்று. திருச்சி கவிதாமணி திரு கிருஷ்ணசாமி ரெட்டியார் வரவேற்புரை நிகழ்த்தினார். டாக்டர் மாணிக்கம் எம். ஏ. பிஎச்டி அவர்கள் மாநாட்டு மலரை வெளியிட்டார். ' திருக்கோயில் - பத்திரிகை ஆசிரியர் திரு முருகவேள் அவர்கள் 'சைவ நெறி' பற்றிச் சிறப்புரை ஆற்றினார்கள்.

### சனாதன தர்மப் புதிர்கள் அக்டோபர் விடைகள்

1. அவனி விடங்கர்
2. மரம்
3. கர்னாடகா நந்தி துர்கம்
4. லோபாமுத்ரை
5. திருமறைக் காடு
6. அக்னி
7. பசுபதி
8. சைவ மடத்தைச் சார்ந்த துறவிகள்
9. பெரும்பாணாற்றுப் படை
10. இளையாத்தங்குடி.




# ஜகத்குரு வசனம்

## பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் அருளுரைகள்

''உங்களுக்கு ப்ரச்னையோ, மனக்கஷ்டமோ எதுவாக இருந்தாலும் இந்த நூலை வைத்துக்கொண்டு ஏதாவது ஒரு பக்கத்தைத் திருப்பினீர்களேயானால் அந்தப் பக்கத்தில் தங்களுக்கான தீர்வு கிடைக்கும்''
என்று இந்த நூலை வெளியிட்டு உரையாற்றும்போது கலைமகள் ஆசிரியர் திரு. கீழாம்பூர் சங்கரசுப்பிரமணியன் அவர்கள் தெரிவித்தார்கள்.

704 + 112 வண்ணப் பக்கங்கள் = 816 பக்கங்கள் / புத்தகத்தின் விலை : ₹ 700/- தபால் செலவு இலவசம்



## இதுவரை இதுபோல் அகராதி வந்ததில்லை

பேராசிரியர் S. ஹரிஹரன் அவர்கள் எழுதிய

# தமிழ் - ஸம்ஸ்கிருத அகராதி

சுமார் 1050 பக்கங்கள் கொண்ட இந்த அகராதியில் ஏறத்தாழ 45000 தமிழ் சொற்களுக்கு பன்மடங்கு ஸம்ஸ்க்ருத சொற்கள் கொடுக்கப் பட்டுள்ளன. ஒரு தமிழ் சொல்லுக்கு பல ஸம்ஸ்க்ருத பதங்கள் உள்ளன. உதாரணமாக "சிவன்" என்ற தமிழ் சொல்லுக்கு ஸம்ஸ்க்ருதத்தில் 150 பதங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

மேலும் வேற்றுமை உருபுகள் மற்றும் ஒருமை, இருமை, பன்மை பயன்பாடும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

புத்தகத்தின் விலை : ₹ 800/- தபால் செலவு இலவசம்

## LKM வழங்கும் அவசியமான பாதுகாக்கப்பட வேண்டிய மிகச் சிறந்த நூல்கள்


| புத்தகத்தின் பெயர் | விலை | புத்தகத்தின் பெயர் | விலை |
|---|---|---|---|
| ஸ்ரீ லலிதா த்ரிசதி (விரிவுரை) | 250 | நலம் தரும் நாராயணீயம் | 250 |
| ஸ்ரீ ருத்ரம் தமிழிலும் துதிப்போமே | 50 | கீதகோவிந்த ரஸாம்ருதம் (அஷ்டபதி) | 250 |
| அபிராமி அந்தாதியும் சௌந்தர்யலஹரியும் - ஓர் ஒப்பு நோக்கு | 150 | ஸ்ரீ சங்கரரின் ஆத்மபோதம்<br>விவேக சூடாமணி | 100<br>120 |

**LKM Publication**
10, Ramachandra Street
T. Nagar, Chennai - 17.
Phone : 28142241 / 9940682929

தபாலில் புத்தகங்களைப் பெற விரும்புவோர், LKM PUBLICATION என்னும் பெயரில் DD/MO/ATPAR Cheque எடுத்து அனுப்ப வேண்டும். தபால் செலவு இலவசம். வங்கி கணக்கில் பணம் செலுத்த விரும்புவோர் (Andhra Bank A/C. No.055713100000195 IFS Code : ANDB0000557) என்ற எங்கள் வங்கிக் கணக்கிலோ அல்லது 9940682929 என்ற எண்ணிற்கு Google Pay மூலமோ பணம் செலுத்தி 9940682929 என்ற வாட்ஸ் ஆப் எண்ணில் தெரியப்படுத்தவும்.

ஸ்ரீ மாதா டிரஸ்ட் DONATE LIBERALLY தாராளமான நன்கொடையை வழங்குங்கள்

## ஸ்ரீ மாதா டிரஸ்டின் புதிய அத்தியாயம்



# "ஸ்ரீ ஜெயேந்திர பெரியவா முதியோர் இல்லம்"

முதுமையில் தனிமை, அதனுடன் வறுமை-இதைவிடக் கொடுமை இவ்வுலகில் ஏதுமில்லை. அன்பாய் பேசிடவும், ஆதரவாய் அரவணைத்திடவும் எவரும் இல்லாத நிலையில், தங்கள் வேதனையை மரணம் மட்டுமே தீர்த்திடும் என்று தவித்திருக்கும் நம்மை பெற்றெடுக்காத தாய்-தந்தையருக்கு நாம் என்ன செய்யப் போகிறோம்? என்பது போன்ற எண்ணற்ற கேள்விகளை – **தன் இளம் வயதில் தாயை இழந்து, இன்று வரை தாயன்புக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் "ஏழை புற்று நோயாளிகளின் பாதுகாவலர்" திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தனக்குள்ளே கேட்டுக்கொண்டதற்கு விடையாகவும், ஸ்ரீ ஜெயேந்திர பெரியவா அவர்கள் நிறைவேற்ற எண்ணியிருந்த தர்ம கார்யத்தின் செயல்வடிவமாகவும்**, ஸ்ரீ மாதா டிரஸ்டின் புதிய பரிணாமமாகவும் உருவாகவிருக்கிறது **ஸ்ரீ ஜெயேந்திர பெரியவா முதியோர் இல்லம்.**

**முற்றிலும் இலவசமாக செயல்படவிருக்கும் இந்த முதியோர் இல்லம் ஆதரவற்ற, ஏழை முதியவர்களை அடைத்து வைக்கும் கொட்டகையாக இல்லாமல், முதியவர்களுக்கு வேண்டிய அனைத்து வசதிகளை உள்ளடக்கியதாகவும், மரங்கள் அடர்ந்த-காற்றோட்டமான இயற்கைச் சூழலிலும், சௌகரியமான படுக்கை, சுகாதாரமான கழிப்பறை, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், மின்விசிறி மற்றும் அலமாறிகளுடன் கூடிய விஸ்தாரமான அறைகளுடனும், முதலுதவிக்கான மருத்துவ வசதி மற்றும் இலவச ஆம்புலன்ஸ் சேவையுடனும் சென்னைக்கு மிக அருகாமையில் அமைய உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.**




அன்பிற்கினியவர்களே, இம்மாபெரும் தர்மத்தேரின் வடம் பிடிக்க ஸ்ரீ மாதா டிரஸ்ட், மனிதநேயம் மிக்க உங்களை இருகரம் கூப்பி அழைக்கின்றது. **நம்மில் பலர் இன்று பல்வேறு நிலைகளில் வசதி வாய்ப்புகளுடன் இருந்தாலும், நாம் இந்த உயரத்தை எட்ட அயராது பாடுபட்ட நம் தாய்-தந்தையர் நம்முடன் இல்லையே என்கிற தீராத மனவேதனையுடன்தானே வாழ்ந்து வருகிறோம்? இவ்வேதனைக்கு வடிகாலாய் ஸ்ரீ மாதா டிரஸ்ட் ஸ்தாபிக்கவிருக்கும் இலவச முதியோர் இல்லம் அமையும் என்பது எங்களது நம்பிக்கை.** சுமார் இரண்டு கோடி ரூபாய் செலவில் அமையவிருக்கும் இம்முதியோர் இல்லத்தில் அனைத்து அம்சங்களுடன் கூடிய தங்கும் அறை ஒன்றுக்கு ரூபாய் ஐந்து லட்சம் செலவாகும் என்று திட்டமிடப்பட்டுள்ளது. இத்தொகையை நன்கொடையாக அளிப்பதன் மூலம் நீங்கள் விரும்பும் நபரின் பெயருடன் ஒரு அறை அமைக்கப்படும். **நமது வாழ்வில் ஒளி வீச மெழுகாய் உருகிய நமது பெற்றோர்களின் நினைவுகளை காலத்தின் கல்வெட்டுகளில் நிரந்தரமாய் இடம்பெறச் செய்வது, நமது பெற்றோர்களுக்கு நாம் செய்யும் கைம்மாறாகவே அமையும்;**

**தங்களது சொத்துகளுக்கு வாரிசு இல்லையே என்று ஏங்குவோர் இந்த தர்மச் செயலுக்கு உதவுவதன் மூலம் தங்கள் மன வேதனையை போக்கிக் கொள்ள முடியும்; மேலும், அன்பு காட்டாத உறவினர்களுக்கு உங்கள் சொத்து சென்று சேர்வதைக் காட்டிலும் இந்த நற்செயல் உயர்ந்த புண்ணியம் அல்லவா?**

**சிந்தியுங்கள்... செயலாற்றுங்கள்...**

ஸ்ரீ மாதா டிரஸ்ட் SRI MATHA TRUST ஸ்ரீ மாதா டிரஸ்ட் SRI MATHA TRUST ஸ்ரீ மாதா டிரஸ்ட் SRI MATHA TRUST ஸ்ரீ மாதா டிரஸ்ட்



P AKASHRAM
Executive Trustee

# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

**2000-ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின் துயர் தீர்க்கும் "இலவச காப்பகம்"**



Valasai K JAYARAMAN
Trustee (Projects)

V.KRISHNAMOORTHY MANAGING TRUSTEE



அடையாறு, கேன்சர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வரும் ஏழை புற்றுநோயாளிகளின் தாய்வீடாக விளங்கும் ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வகிக்கும் **நம்ம தர்மசாலா**வில் தங்கியிருக்கும் ஏழை புற்றுநோயாளிகள், தங்களது இல்லத்தில் பாதுகாப்பாகவும், சுதந்திரமாகவும் இருப்பது போலவே நம்ம தர்மசாலாவில் தங்கியிருக்கும் போதும் உணர்கிறோம் என்று மகிழ்ச்சியுடனும் நெகிழ்ச்சியுடனும் கூறுகிறார்கள். இதற்கு நம்ம தர்மசாலா ஏழைபுற்றுநோயாளிகள் மீது கொண்டுள்ள பரிவும், பாசமுமே காரணம். நம்ம தர்ம சாலாவில் ஏழை புற்றுநோயாளிகள் மூன்று வேளை உணவும்; பாதுகாப்பான தங்கு மிடமும் வழங்கப்பட்டு சிறப்பான முறையில் பராமரிக்கப்படுகிறார்கள். ஏழை புற்றுநோயாளிகளின் பசிப்பிணி போக்கும் திருப் பணிக்கு உதவி செய்யுங் கள். இதைக் காட்டிலும் உண் மையான இன்பம் தரக் கூடியது வேறு இல்லை என்ப தையும் உணர்ந்திடுங்கள்.



அடையாறு கேன்சர் மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொள் ளும் பொருட்டு நமது **நம்ம தர்மசாலா**வில் தன் மகளுடன் தங்கியிருக்கும் ஏழை விவசாயி ஒருவரின் மனைவி, புற்று நோயின் கோரப்பசிக்கு தன் காலை பறிகொடுத்துவிட்டார். தனது எதிர்காலத்தை எண்ணி கண் கலங்கிய அந்த ஏழைத் தாய்க்கு செயற்கைக் கால் பொருத்துவதற்காக முழு செலவையும் ஸ்ரீ மாதா டிரஸ்ட் சார்பில் திரு கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வழங்கி, அத்தாய்க்கு ஆறுதல் கூறி தேற்றினார்.

**தங்களது நன்கொடையை இவ்வாறு வழங்கலாம்** ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம் ரூ.75,000/- நிதியளித்து வள்ளல் ஆகலாம் ரூ.25,000/- நிதியளித்து "நம்ம தர்மசாலா"வின் ஒரு நாள் செலவினை ஏற்கலாம் ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம் ரூ.5,000/- நிதியளித்து மதிய / இரவு உணவு செலவினை ஏற்கலாம் ரூ.3,000/- நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம்

Kindly send your contribution by CHEQUE / NEFT / M.O.
Account Name : SRI MATHA TRUST
Bank Name : INDIAN OVERSEAS BANK
Branch: Gandhi Nagar, Chennai-20.
Current A/c No.:163502000001090
IFSC Code:IOBA0001635

DONATIONS TO OUR TRUST IS EXEMPTED U/S.80 (G) OF THE INCOME TAX ACT.

ADMIN OFFICE: 95/6, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, Adyar, [next to Harini Skin & Laser Clinic] Chennai-20. Tel:044-24420727, 42661687
NAMMA DHARMASALA: 9, Yogi Garden, Sriram Nagar Main Road, Adjacent to IIT Compound, Near New Cancer Institute, Chennai-113. Tel: 044-4509 8647
REGD. OFFICE: "Natha Kamalam", No.1-A, Periazhwar Street, Sundaram Colony, East Tambaram, Chennai-59. Mobile: 9500001065 / 9003247857
vkrishnamoorthy.smt@gmail.com www.srimathatrust.org

# தசதானம், பஞ்சதானம்

# TEN DANAS AND FIVE DANAS

## दीपदानम्

*தீபதானம்*

परमात्मतनो दीप परमार्थप्रकाशक ।
आत्मानात्मविवेकं मे जनय त्वत्प्रमादत: ।।

इमं दीपं मदक्षिणाकं अग्निदैवत्यं ब्राह्मणायं तुभ्यमहं संप्रददे न मम ।

***பரமாத்மதநோ தீப பரமார்த்தப்ரகாஶ க ।***
***ஆத்மாநாத்மவிவேகம் மே ஜநய த்வத்ப்ரஸாததஃ ।***
***இமம் தீபம் ஸதக்ஷிணாகம் அக்நிதைவத்யம் ப்ராஹ்மணாய துப்யமஹம் ஸம்ப்ரததே ந மம ।***

*தீபமே, உன் உருவமே பரமாத்மா; நீ பரமாத்மாவைப் பிரகாசப்படுத்துகிறாய். உன் அருளினால் ஆத்மா, அனாத்மா என்கிற விவேகத்தினை என்னுள் உண்டு பண்ணுவாயாக. (ஆத்மா என்றும் நிலையானது, எங்கும் பரவி நிற்பது. அனாத்மா தாற்காலிகமானது, இடம், பொருள், காலம் ஆகியவற்றால் வரையறுக்கப்பட்டது).*

*அக்னிதெய்வத்துக்கு உகந்த இந்த தீபத்தினை நான் தக்ஷிணை மற்றும் தாம்பூலத்துடன், பிராம்மணராகிய தங்களுக்கு அளிக்கிறேன். இனி இது என்னுடையதல்ல.*

### Deepadanam

Deepa, your very form is Paramatma; you light up the Supreme goal. By your grace please generate in me the discrimination between Atma and Anatma. (Atma is eternal and all&pervasive. Anatma is transient and limited by time, space and object).

I am giving in Dana this Deepa (Lamp), which is pleasing to Bhagavan Agni, with Dakshina and Tambula to you, brahmana; this is no more mine.

# पुस्तकदानम्

*புஸ்தகதானம்*

मर्वविद्यास्पदं ज्ञानकारणं विमलाक्षरम् ।
पुस्तकं मंप्रयच्छामि प्रीता भवतु भारती ॥

इदं पुस्तकं मरस्वतीप्रीतिं कामयमानः ब्राह्मणाय तुभ्यमहं संप्रददे न मम ।

***ஸர்வவித்யாஸ்பதம் ஜ்ஞாநகாரணம் விமலாக்ஷரம் ।***
***புஸ்தகம் ஸம்ப்ரயச்சாமி ப்ரீதா பவது பாரதீ ॥***
***இதம் புஸ்தகம் ஸரஸ்வதீப்ரீதிம் காமயமாநஃ ப்ராஹ்மணாய துப்யமஹம் ஸம்ப்ரததே ந மம ।***

*எல்லாவித்யைகளுக்கும் இருப்பிடமானதும், ஞானம் உண்டாகக் காரணமாவதும், சுத்தமான எளிதான அக்ஷரங்களாலானதும் ஆன இப்புத்தகத்தை அளிக்கிறேன். ஸரஸ்வதிதேவி என்னிடம் பிரீதி அடையட்டும்.*

*இந்த புத்தகத்தினை ஸரஸ்வதிதேவியின் பிரீதியைவேண்டி, நான் தக்ஷிணை மற்றும் தாம்பூலத்துடன், பிராம்மணராகிய தங்களுக்கு அளிக்கிறேன். இனி இது என்னுடையதல்ல.*

**Pustakadanam**

I am giving this book, the abode of all knowledge and the source of Gnana, and which is composed of clear letters of alphabet. May Devi Saraswathi be pleased with me.

I am giving in Dana this Book (Pustaka) for obtaining the grace of Devi Saraswathi, with Dakshina and Tambula to you, brahmana; this is no more mine.

# घण्दादानम्

*கண்டாதானம்*

घण्डा देवप्रिया नित्यं दैत्यत्रासकरी सदा ।
संप्रदानेन चैतस्यां विजयोऽस्तु मदा मम ॥

इमां घण्टां विष्णुदैवत्यां सदक्षिणाकां ब्राह्मणाय तुभ्यमहं संप्रददे न मम ।

**கண்டா தேவப்ரியா நித்யம் தைத்யத்ராஸகரீ ஸதா ।**
**ஸம்ப்ரதாநேந சைதஸ்யாம் விஜயோஸ்து ஸதா மம ॥**
**இமாம் கண்டாம் விஷ்ணுதைவத்யாம் ஸதக்ஷிணாகாம் ப்ராஹ்மணாய துப்யமஹம் ஸம்ப்ரததே ந மம ।**

*மணி தேவர்களுக்குப் பிரியமானது; நித்தியமானது; எப்போதும் அசுரர்களைப் பயமுறுத்துவது.*

*விஷ்ணுபகவானுக்கு உகந்த இந்த மணியினை நான் தக்ஷிணை மற்றும் தாம்பூலத்துடன், பிராம்மணராகிய தங்களுக்கு அளிக்கிறேன். இனி இது என்னுடையதல்ல.*

**Ghantadanam**

Bell is dear to Devas, is eternal, and always generates fear in Asuras.

I am giving in Dana this Ghanta (Bell), which is pleasing to Bhagavan Vishnu, with Dakshina and Tambula to you, brahmana; this is no more mine.

## वस्त्रदानम्

*வஸ்திரதானம்*

शीतवातोष्णासंत्राणं लज्जाया: रक्षणं परम् ।
देहालङ्करणं वस्त्रं अत: शान्तिं प्रयच्छ मे ॥

समस्तपापक्षयकाम: इदं वस्त्रं सदक्षिणाकं सर्वदेवत्यं ब्रह्मइमां तुभ्यमहं संप्रददे न मम ।

**ஶீதவாதோஷ்ணஸந்த்ராணம் லஜ்ஜாயா꞉ ரக்ஷணம் பரம் ।**
**தேஹாலங்கரணம் வஸ்த்ரம் அத꞉ ஶாந்திம் ப்ரயச்ச மே ॥**
**ஸமஸ்தபாபக்ஷயகாம꞉ இதம் வஸ்த்ரம் ஸதக்ஷிணாகம் ஸர்வதைவத்யம் ப்ராஹ்மணாய துப்யமஹம் ஸம்ப்ரததே ந மம ।**

*வஸ்திரம் குளிர், காற்று, வெப்பம் ஆகியவற்றிலிருந்து காப்பது, லஜ்ஜையை (வெட்கத்தை) காப்பதில் சிறந்தது, தேகத்திற்கு அலங்காரமாக இருப்பது. இதனை நான் தானம் செய்வதால் எனக்கு மனச்சாந்தியை அருளுவீராக.*
*எல்லா பாவங்களையும் போக்க விரும்பும் நான், எல்லா தெய்வங்களுக்கும் உகந்த இந்த வஸ்திரத்தை, தக்ஷிணை மற்றும் தாம்பூலத்துடன், பிராம்மணராகிய தங்களுக்கு அளிக்கிறேன். இனி இது என்னுடையதல்ல.*

**Vastradanam**

Cloth protects the wearer from cold, wind and heat; the best in protecting shame; it serves as adornment for the body. Hence by giving Danam of this cloth, may you grant me inner peace of mind.

Desirous of getting rid of all sins, I am giving in Dana this Cloth (Vastra), which is pleasing to all Devas, with Dakshina and Tambula to you, brahmana; this is no more mine.

## उदकुम्भदानम्

*உதகும்பதானம்*

ब्रह्मणा प्रथमं सृष्टा: अघमर्षणहेतव: ।
आपो युष्मत्प्रदानेन तृप्यन्तु मम देवता: ।।

इदं उदकुम्भं सदक्षिणाकं वरुणादैवत्यं ब्रह्मइमां तुभ्यमहं संप्रददे न मम ।

***ப்ரஹ்மணா ப்ரதமம் ஸ்ருஷ்டாஃ அகமர்ஷணஹேதவஃ ।***
***ஆபோ யுஷ்மத்ப்ரதாநேந த்ருப்யந்து மம தேவதாஃ ।।***
***இதம் உதகும்பம் ஸதக்ஷிணாகம் வருணதைவத்யம் ப்ராஹ்மணாய துப்யமஹம் ஸம்ப்ரததே ந மம ।***

*நீர்களே, நீங்கள் பிரம்மதேவனால் முதலில் ஸ்ருஷ்டிக்கப்பட்டீர்கள். ஜனங்களின் பாவங்களைப் போக்குவதில் காரணமாக உள்ளீர்கள். நீர்களைத் தானம் செய்வதால் தேவதைகள் என்னிடம் திருப்தியடையட்டும்.*

*வருணபகவானுக்கு உகந்த இந்த ஜலம் நிறைந்த குடத்தை, தக்ஷிணை மற்றும் தாம்பூலத்துடன், பிராம்மணராகிய தங்களுக்கு அளிக்கிறேன். இனி இது என்னுடையதல்ல.*

**Udakumbha Danam**

Waters, you were created first by Brahmadeva. You are instrumental in destruction of sins. May Devatas be pleased with me by my giving Dana of Waters.

I am giving in Dana this Pot full of Waters (Udakumbha), which is pleasing to Bhagavan Varuna, with Dakshina and Tambula to you, brahmana; this is no more mine.

# भूरिदानम्

*பூரிதானம்*

हिरण्यगर्भगर्भस्थं हेमबीजं विभावसोः ।
अनन्तपष्ण्यफलदं अतः स्जान्तिं प्रयच्छ मे ।।

प्रतिनिधित्वेन भूरिदक्षिणां ब्रह्मइमां तुभ्यमहं संप्रददे न मम ।

***ஹிரண்யகர்பகர்பஸ்தம் ஹேமபீஜம் விபாவஸோஃ ।***
***அநந்தபுண்யபலதம் அதஃ ஶாந்திம் ப்ரயச்ச மே ।।***
***அநுஷ்டிதஸ்ய கர்மணஃ ஸம்பூர்ணஸாங்கபலஸித்யர்த்தம் அவஶிஷ்டதாந ப்ரதிநிதித்வேந பூரிதக்ஷிணாம் ப்ராஹ்மணேப்யஃ ஸம்ப்ரததே ந மம ।***

*ஹிரண்யகர்ப்பரின் (பிரம்மதேவரின்) கர்ப்பத்தில் உள்ள பொன்மயமான ஒளிவீசும் பரமாத்மாவின் இவ்விதையை, எல்லையற்ற பலனை அருளும் இதனை நான் தானம் செய்வதால் எனக்கு மனச்சாந்தியை அருளுவீராக.*

*அனுஷ்டானம் செய்யப்பட்ட இந்த கர்மா ஸம்பூர்ணமான, நிறைவான பலனைத் தரவேண்டி, மீதமிருக்கிற தானங்களுக்குப் பிரதிநிதியாக, இந்த நிறைவான தக்ஷிணையை மற்றும் தாம்பூலத்துடன், பிராம்மணர்களாகிய தங்களுக்கு அளிக்கிறேன். இனி இது என்னுடையதல்ல.*

**Bhuri Danam**

By giving Dana of this luminous golden seed of Paramatma situated in the womb of Hiranyagarbha (Brahmadeva), which grants limitless fruits, may you bestow on me inner peace.

For this Karma, which has been performed now, to grant full and complete fruit, I am giving this Bhuri dana (plenty of cash) in lieu of balance Danas, with Dakshina and Tambula to you, brahmanas; this is no more mine.

# फलदानम्

*பலதானம்*

फलं मनोरथफलं प्रददाति मदा नृणाम् ।
पुत्रपौत्राभिवृद्ध्यर्थं श्रेय: पुष्टिं प्रयच्छ मे ॥

मताम्बूलानि मदक्षिणाकानि ब्रह्मणेभ्य: संप्रददे न मम ।

***பலம் மநோரதபலம் ப்ரததாதி ஸதா ந்ருணாம் ।***
***புத்ரபௌத்ராபிவ்ருத்யர்த்தம் ஶ்ரேயஃ புஷ்டிம் ப்ரயச்ச மே ॥***
***அநுஷ்டிதஸ்ய கர்மணஃ ஸம்பூர்ணஸாங்கபலஸித்யர்த்தம் இமாநி பலாநி ஸதாம்பூலாநி ஸதக்ஷிணாகாநி ப்ராஹ்மணேப்யஃ ஸம்ப்ரததே ந மம ।***

*பழம் எப்போதும் மக்களின் மனோரதங்களை நிறைவேற்றுகிறது. புத்திரர், பௌத்திரர் ஆகிய ஸந்ததி அபிவிருத்தியாகவேண்டியும், ஸ்ரேயஸ்ஸையும், புஷ்டியையும் எனக்கு அருள்வாயாக.*

*அனுஷ்டானம் செய்யப்பட்ட இந்த கர்மா ஸம்பூர்ணமான, நிறைவான பலனைத் தரவேண்டி, இந்த பழங்களை மற்றும் தாம்பூலம், தக்ஷிணையுடன், பிராம்மணர்களாகிய தங்களுக்கு அளிக்கிறேன். இனி இது என்னுடையதல்ல.*

**Phaladanam**

Fruit always fulfills the desires of people. May you grant me growth of lineage of sons and grandsons, spiritual satisfaction and nourishment.

For this Karma, which has been performed now, to grant full and complete fruit, I am giving these Fruits (Phala), with Dakshina and Tambula to you, brahmanas; this is no more mine.

P. R. Kannan

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி 30

ஏ சுந்தரம் ஐ அர் எஸ்



நான் காஞ்சி பெரியவாளைப் பார்க்க அடிக்கடி போவது உண்டு. அன்று நானும் என் மனைவியும், பெண்ணும் ஸ்ரீமடத்திற்குச் சென்றோம்.

அவர் தர்சன பாக்யம் கிடைக்க மகிழ்ச்சி அடைந்தோம். அப்போது ஒரு முஸ்லீம் தன்னுடைய மகன் குலாம் தஸ்கிர் என்பவரை அழைத்து வந்தார். அவருக்கு இரண்டு கண்களும் தெரியவில்லை. அவரிடம் ஒரு வயலின் இருந்தது. இருவரும் நம் வழக்கப்படி சட்டைகளைக் கழற்றி விட்டு ஸ்வாமிகளை நமஸ்கரித்தனர்.

தன்னுடைய மகன் தஸ்தகிர் ஒரு வயலின் போட்டியில் கலந்து கொள்ள இருப்பதாகவும் அதற்கு பெரியவாளுடைய ஆசீர்வாதம் வேண்டுமென்றும் இங்கேயே சன்னிதியில் அவர் வயலின் வாசிக்க அனுமதிக்க வேண்டுமென்றும் கேட்க பெரியவாளும் சம்மதித்தார்.

தஸ்தகிர் வயலின் வாசித்து முடித்தபின் அந்த முஸ்லிம் அன்பரிடம் அவருடைய பூர்வோத்திரங்களை மிகப்பரிவுடன் கேட்டார். பிறகு பெரியவா இரண்டு வேஷ்டிகள் கொண்டு வரச்சொல்லி அதைத் தன் கையால் தொட்டுக் கொடுத்து இரண்டு மாம்பழங்களை அவர்களுக்குக் கொடுத்தார்.

இரண்டு முஸ்லிம்களும் மிகவும் நெகிழ்ந்து போனர்கள். தஸ்தகிர் யாரிடம் சிக்ஷை விவரங்களைக் கேட்டார். அதன்பின் தஸ்தகிருடைய வயலினை பெரியவா தொட்டு கொடுக்க வேண்ட பெரியவாளும் அப்படியே செய்தார்.

பின்பு இருவரும் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து அவருடைய அனுமதி பெற்று புறப்பட்டனர். இதைக் கண்ட அங்கிருந்த அனைவரும் ஆச்சர்யப்பட்டனர். பெரியவா

ஜாதி மத பேதங்களைத் தாண்டி அனைவருக்கும் அருள்பாலிக்கும் தெய்வம். அவருடைய கருணையே கருணை. இச்சம்பவம் என் மனத்தை விட்டு அகலவேயில்லை.

இன்னொரு சம்பவம் பெரியவா காஷ்ட மௌனம் அப்யசித்துக் கொண்டு இருந்தார். ஸ்ரீமடத்தில் வருவோர் போவோர் அதிகமாயிருந்தது. வரிசையில் இருந்தவர்கள் ஒவ்வொருவராக தர்சனம்செய்து கொண்டு நிறைவுடன் சென்று கொண்டிருந்தனர். வரிசையின் நடுவில் ஒரு மாது அழுக்கு வஸ்த்ரத்துடன் விக்கி விக்கி அழுதுகொண்டு இருந்தார். அந்த ஏகாந்த சூழ்நிலையை அவள் கெடுப்பதாக அங்கிருந்தவர்கள் நினைத்தனர். அவள் பெரியவாகிட்ட வந்தவுடன் சாமீ என்னை பாருங்க சாமீ என்னைப் பாருங்க என்று கூறி நின்றாள். தொண்டரொருவர் சூ சத்தம் போடாதே தர்சனம் பண்ணிண்டு போ என்று அதட்ட மீண்டும் அவள் அழுதுகொண்டே சாமீ என்று கூவினாள். எல்லாருக்கும் அவளது நடவடிக்கைப் பிடிக்கவில்லை. ஆனால் நிகழ்ந்தது அத்புதம். அவள் கூப்பிட்ட சாமீ (பெரியவா) கண் திறந்தார். அவள் ''ஸாமீ என் புருஷன் என்னோட வாழலிங்க..


என்னாசுன்னே தெரியலிங்க, நானும் அவரும் சேர்ந்து வாழ நீங்கதான் ஏதாச்சும் பண்ணணுங்க'' என்று தன் குறையைச் சொன்னாள். பெரியவா அவளைப் பார்த்து இரண்டு வாழைப் பழங்களைத் தந்து ஆசீர்வத்தித்தார். மீண்டும் மௌனத்துக்குப் போய் விட்டார். எத்தனையோ மாதங்கள் போயின. ஸ்ரீமடத்திற்கு ஒரு நாள் தம்பதி தன் மாட்டையும் கன்னுக்குட்டியையும் கொண்டு வந்திருந்தனர். மாட்டை அங்கு தூணில் கட்டிவிட்டு அவ்விருவரும் பெரியவாளைத் தர்சிக்கச் சென்றனர். வரிசையில் அவர்கள் இடம் வந்தது. அவள் ''ஸாமீ நான் வேண்டிக்கிட்ட மாதிரி சரி பண்ணிட்டீங்க. நீங்க தந்த பழத்தில ஒண்ணை இவரை சாப்படச்சொன்னங்க. மறு நாள்ளேர்ந்து மாறிட்டாங்க.

என்ன வுட்டு போறதில்லன்னுட்டு சத்யம் பண்ணிட்டாருங்க. இப்போ ஒண்ணாத இருக்கோங்க. அதுக்கு பதில் மரியாதையா எங்க மாட்டையும் கன்னுகுட்டியையும் கொணந்த்ருக்கங்க. நீங்க அந்த பாலை தெனம் சாப்படணுங்க''என்று மகிழ்ச்சியுடன் கூறினாள். பெரியவாளும் புன்னகையுடன் அவர்களை ஆசீர்வதித்தார். ஜாதி மதம் கடந்தவர் பெரியவா என்பதற்கு இதுவும் ஓர் உதாரணம்.

(தொடரும்)

# கௌசல்யா கவசம்

**ராமாயணம்**



*13. குழந்தாய் அச்சமுறத்தக்க தீசெயல் புரியும் அரக்கர்களுடையவும், பிசாசங்களுடையவும், பச்சை மாம்சங்களைத் தின்னும் அரக்கர்களது தீங்கு உனக்கு உண்டாமலிருக்கட்டும்.*

*14. குரங்குகள், தேள்கள், காட்டீக்கள், பாம்புகள், புழுக்கள் இவை அடர்த்தியான காட்டில் பீடை செய்யாதிருக்கட்டும்.*

*15. பெரிய யானைகள், சிங்கங்கள், புலிகள், காட்டுப் பன்றிகள், கரடிகள், கொம்புள்ள கொடிய காட்டெருமைகள் உனக்குப் பீடை செய்யாதிருக்கட்டும்.*

*16. என் உளமுருகிய ப்ரார்தனையால் நரமாம்ஸ பக்ஷினிகளும், பிசாசங்களும் உன்னை வருந்தாதிருக்கடவன.*

*17. ராம நீ செல்லும் வழிகள் மங்களமாயிருக்கட்டும். உனது பராக்ரமம் ஸகல கார்ய சித்தியடையவை.ஸ்வஸ்திமானாக செல்வாயாக.*

*18. மானிட உலகம் விண்ணுலகம் இங்கு இருக்கும் தேவதைகள் உனக்கு மீண்டும் மீண்டும் நன்மை செய்யட்டும்.*

*19. ஸ்ரீராம சுக்ரன், சந்த்ரன், சூர்யன், குபேரன், யமன் இவர்கள் இப்போது அர்ச்சனை செய்யப்பட்டவர்களாய் உன்னைப் பாதுகாக்ககடவர்.*

*20. ரகு நந்தன அக்னி வாயு தூம நக்ஷத்ரம் அர்க்யமளிக்கும் வேளையில் ரிஷிகளின் திருவாக்கிலிருந்து வரும் மந்த்ரங்கள் உன்னைக் காக்கட்டும்.*

*21. ஸ்ரீமன் நாராயணனும், சிவபெருமானும், ப்ரம்மதேவரும் மற்ற தேவர்கள் எவர்களோ அவர்களும் ரிஷிகளும் வனவாஸியாகிய உன்னைக் காக்கட்டும்.*

22. வ்ருத்ராசுரனைக் கொல்லும் விஷயத்தில் தேவர்களெல்லாராலும் நமஸ்கரிக்கப்பட்ட தேவேந்த்ரன் விஷயத்தில் எந்த மங்களம் உண்டாயிற்றோ அந்த மங்களம் உனக்கு உண்டாகட்டும்.

23. முன் காலத்தில் அம்ருதத்தைத் தேடி சென்ற கருடபகவானுக்கு வினதை எந்த மங்களத்தை செய்தாளோ அந்த மங்களம் உனக்கு உண்டாகட்டும்.


24. அம்ருதம் கடைந்தபோது தேவேந்தரனுக்கு அதிதி தேவதை எந்த மங்களத்தை செய்தாளோ அந்த மங்களம் உனக்கு உண்டாகட்டும்.

25. ஸ்ரீராம மூன்றுகாலடிகளாக மூவுலகையும் அளந்தவரும் அளக்க முடியாத தேஜஸுடையவருமான விஷ்ணுபகவானுக்கு எந்த மங்களம் உண்டாயிற்றோ அந்த மங்களம் உனக்கு உண்டாகட்டும்.

26 . மஹாபாகுவே ருதுக்கள் சாகரங்கள் தீவுகள் வேதங்கள் லோகங்கள் திசைகள் வனத்தில் உனக்கு மங்களங்களை அளிக்கட்டும்.

27. கருடத்வஜனுக்கு மங்களம், மதுஸூதனனுக்கு மங்களம், புண்டரீ காக்ஷனுக்கு மங்களம். அந்த விஷ்ணு பகவான் மங்களமாய் உனக்கு இருக்கட்டும்.

(தொடரும்)





# புராணக் கதை

## காஞ்சி வாதூலன்

பௌராணிகர் கூறலானார். தற்போது நாட்டில் பொய், லஞ்சம், அதர்மம் இவை கட்டுக்கடங்காமல் உள்ளன. அதிகாரிகள் நேர்மையின்றி அவையில் பொய் கூறுகின்றனர். இதன் விளைவுகள் எவ்வளவு பயங்கரம் என்று அவர்களுக்குத் தெரிவதில்லை. இதற்கு ஒரு கதை உண்டு என்று கூறலானார்.

கேசினி என்னும் அழகான பெண்ணை ப்ரகலாதனுடைய பேரன் விரோசனனும் ஸுதன்வா என்னும் அந்தணனும் விரும்பினர். இருவருக்கும் இடையே நான் பெரியவன் என்னும் அகந்தை உண்டாயிற்று.

இருவரும் உயிர் பந்தயம் வைத்து யார் பெரியவர் என்னும் விவாதத்திற்கு எவர் விடை கூறுவார் என்று யோசித்தனர். இருவரும் ப்ரகலாதனிடமே சென்று கேட்டனர். ப்ரகலாதன் சுதன்வாவைக் கண்டு பயந்தான். ஆங்கிரஸின் புத்ரனான ப்ரம்ம தேஜஸுடன் விளங்கினான்.


சுதன்வா ப்ரகலாதா எங்கள் இருவரில் யார் பெரியவர் என்பதை சொல்லும். உண்மை தெரிந்தும் சொல்லாமல் இருப்பின் உம் தலை இந்த்ரனால் சுக்கு நூறாக்கப்படும். ப்ரகலாதனுக்கு தர்ம சங்கடம் . விரோசனனோ தன் பேரன். இன்னொருவரோ அங்கிரஸ் ரிஷியின் குமாரர். உண்மையும் அவனுக்குத் தெரியும்.

இருப்பினும் கஸ்யபரிடம் தன் ஐயத்தைக் கூற சென்றான். ப்ரகலாதன் நடுங்கி கஸ்யபரிடம் இதைக் கேட்க அவர் கூறுவார். ‘‘மகானுபாவரே உமக்கே எல்லா தர்மங்களும் தெரியும். தெரிந்திருந்தும் விருப்பினாலாவது, வெறுப்பினாலாவது, அச்சத்தினாலாவது கேள்விக்கு பதில் சொல்லாமலிருப்பவன் ஆயிரம் வருண பாசங்களை தன் கழுத்தில் மாட்டிகொள்கிறான்.ஆதலால் பதில் தெரிந்தவன் சத்யம் சொல்ல வேண்டும். எந்த சபையில் அதர்மத்தால் தர்மம் கெடுக்கப்படுகிறதோ அந்த சபையோர் தர்மத்தில் தைத்த ஆணியை எடுக்காவிடின் அந்த ஆணியே அவர்களைக் குத்தும். தர்மத்தைக் கேட்பவருக்கு எவர் தப்பான மறுமொழியை கூறுவார்களோ அவர்கள் முன்னேழும் பின்னேழும் தலை முறைகளையும் யாகப் பலங்களையும் அழிக்கின்றனர். அசத்யம் சொல்லுகிறவன் எல்லாத் துன்பங்களையும் அடைகிறான்.

உண்மையைச் சொல்லுபவன் எல்லா நன்மைகளையும் அடைகிறான்.' மனம் தெளிவடைந்த ப்ரகலாதன் விரோசனனிடம் கூறினான்.

''விரோசனா சுதன்வா உன்னைவிடப் பெரியவர். அப்படியே அங்கிரஸ் என்னை விடப் பெரியவர். சுதன்வாவின் தாய் உன் தாயைவிடப் பெரியவள். எனவே சுதன்வாதான் உன் உயிருக்கு அதிகாரி. ''ஸுதன்வா ப்ரகலாதா உன் நேர்மையைப் பாராட்டுகிறேன். பிள்ளைப் பாசத்தில் மூழ்காமல் தர்மத்தில் நின்றதனால் உன் புத்ரனை விட்டு விடுகிறேன். இவன் நூறு வருஷம் ஜீவித்திருக்கட்டும் என்று ஆசீர்வதித்தார். பௌராணிகர் கூறலானார். அரசாங்க அதிகாரிகள் மட்டுமல்ல எல்லாருக்கும் இக்கதை படிப்பினையைக் காட்டுகிறது. இதை உணர்ந்து நடந்தால் அவர்களுக்கும் நாட்டிற்கும் க்ஷேமம்.





# ஸ்யாமளா தண்டகம் பலஸ்ருதி

# स्यामळा दण्डकम् फलश्रुति

येन वा यावकाभाक्रुतिर्भाव्यसे तस्य वश्या भवन्ति स्त्रियपूरुषा:

**யே ந வா யாவகாபாக்ருதிர்பாவ்யஸே தஸ்ய வஸ்யா பவந்தி ஸ்த்ரிய பூருஷா:**

*செம்பஞ்சு நிறமுள்ல தேகமுள்ளவளாக எவனால் த்யானிக்கபடுகிறாயோ அவனுக்குப் பெண்டிரும் ஆடவரும் வயப்படுகிறார்கள்.*

येनवा सातकुभध्युतिर् भाव्यसे सोपि लक्ष्मीसहस्रैर्परिक्रीडसे

**யே ந வா சாதகும்பத்யுதிர் பாவ்யஸே ஸோபி லக்ஷ்மாஸஹஸ்ரைர் பரிக்ரீடஸே**

*பொன்னிறமுள்ளவளாக எவனால் த்யானிக்கபடுகிறாயோ அவனும் ஆயிரக்கணக்கான செல்வங்களுடன் களிப்புறுவான்.*

किम् न सिध्येत्वपु, श्यामल्म् कोमलम् चन्द्रचूटान्वितम् तावकम् ध्यायत:

**கிம் ந ஸித்யேத் வபு; ஸ்யாமலம் கோமளம் சந்த்ரசூடான்விதம் தாவகம் த்யாயத:**

*மிருதுவானதும் கரிய நிறமுள்ளதும் சந்த்ர கலையை முடியில் கொண்டதுமான உனது திருமேனியை த்யானிப்பவனுக்கு எதுதான் கூடாது.*

## ஸனாதன தர்மப் புதிர்கள் நவம்பர் வினாக்கள்

1. திருவங்கொர் விடங்கரின் நாமம் ?
2. பஞ்ச ரத்னங்கள் எவை ?
3. ஆலய விமானங்கள் எத்தனை வகைப்படும் ?
4. கபாலீஸ்வரர் ஆலயம் முன்பு எங்கிருந்தது ?
5. சிவபெருமானின் ஆப்த நண்பரான தேவதை ?
6. மருத்துவராய் இருந்து பின்பு துறவு பூண்டு ப்ரபலமானவர் ?
7. சந்த்ரபாகா அருகில் உள்ள க்ஷேத்ரம் ?
8. அம்பாள் இந்த ஏழு ரூபங்களில் ரக்ஷிக்கிறாள்.
9. பெரியவாளின் பரமேஷ்டி குருவின் சித்திஸ்தலம்
10. முச்சுடர்கள் எவை?

# வேதாந்த ஸாரம்

## ஸதானந்த யோகிந்த்ரர்

வேங்கடகணபதி சர்மா

## தத்வம் அஸி வாக்யத்தின் பொருள்

**அத மாவாக்யார்தோ வர்ண்யதேநஊதம் தத்வமஸி வாக்யம் ஸம்பந்த த்ரயேண அகண்டார்த போதகம் பவதி. 148**

*தத்வமஸி வாக்யத்திற்கு விளக்கம் அளிக்கப்படுகிறது. மூன்று சம்பந்தங்களுடன் தொடர்பு கொண்டு ஐக்யத்தை இவ்வாக்யம் விளக்குகிறது.*

**ஸம்பந்தம் நாம பதயோ; ஸாமானாதிகரணம் பதார்த்யோ: விசேஷண விஸேஷ்யபாவ: ப்ரத்யகாத்ம லக்ஷண்யோர் லக்ஷ்யலக்ஷண பாவச்சேதி ॥ 149**

*மூன்று சம்பந்தங்கள் ஸாமானாதி கரணம் ஒரே ஆதாரத்தைச் சார்ந்த இரண்டுச் சொற்கள். விசேஷண விசேஷ பாவம் இரண்டு வார்தைகளின் பொருள் ஒன்றை ஒன்று குணவிசேஷமாகக் காட்டும். லக்ஷ்யலக்ஷண பாவம் ஒரே வஸ்துவை காட்டும் இரண்டு சொற்கள்.*

*ததுக்தம்*

**''ஸாமாதிகரணம் ச விஸேஷண விசேஷ்யதா**
**லக்ஷ்யலக்ஷண ஸம்பந்த: பதார்தப்ரத்ய்காத்மனா'' 150**

**ஸாமானாதிகறண்ய ஸமப்ந்தஸ்தாவத் யதா ஸோயம் தேவதத்த:**

**இத்யஸ்மின் வாக்யே தத்காலிக விஸிஷ்ட தேவதத்த வாக்ய ஸசப் தைஸ்யை தத்கால விஸிஷ்ட தேவதத்த வாக்ய சப்தஸ்ய ச ஏகஸ்மின் பிண்டே தாத்பர்ய ஸம்பந்த: ந ததா ச தவமஸீதி வாக்யேபி பரோக்ஷத் வாத் விஸிஷ்ட சைதன்ய வாசக தத்பதஸ்ய அபரோக்ஷத்வாத் அதி விசிஷ்ட சைதன்ய வாசகத்வம் பதஸ்ய ச ஏகஸ்மின் சைதன்யே தாத்பர்ய ஸம்பந்த: । 151**

*சமானதிகரணம் ஒரே ஆதாரத்தில் இருக்கும் இரு வார்த்தைகளின் சம்பந்தம் என்று பொருள். உதாரணம் ஸோயம் தேவதத்த: இவனே அந்த தேவதத்தன் இவ்வாக்யத்தில் எப்போதோ பார்த்த தேவதத்தன் அவன் என்றும் இவனே என்னும்போது நிகழ்*

*காலத்தில் உள்ளவன் அவனே இவன் என்று ஒரே ஆளைக் காட்டும். அது போலவே தத் த்வம் அஸி என்னும் வாக்யத்தில் எங்கோ உள்ள சைத்ன்யம் தத் என்றும் த்வம் எனும்பதம் அருகில் உள்ள சைதன்யத்தையும் இரண்டும் ஒரே சைதன்யம் என்று காட்டும்.*

**விஸேஷன விசேஷ்யபாவ ஸம்பந்தஸ்து யதா தத்ரைவ வாக்யே ஸசப்தார்ததத்காலிக விசிஷ்ட தேவதத்தஸ்ய அயம்சப்தார்த தத்' காலவிஸிஷ்டதேவதத்தஸ்ய ச அன்யோன்யபேதவ்யாவர்தகதயா விசேஷண விசேஷ்யபாவ: ந தத்ராபி வாக்ய தத்பதாரதபரோக்ஷத்வாதி விசிஷ்ட சைதன்யஸ்ய த்வம்பதார்த் பரோக்ஷத்வாதி விசிஷ்ட சைதன்யஸ்ய ச அன்யோன்ய பேதவ்யாவர்தகதயா விசேஷண விசேஷ்ய பாவ: ॥ 152**

*விசேஷண விசேஷ பாவ: ஸோயம் தேவதத்த: அந்த தேவதத்தனே இவன் என்னும் வாக்யத்தில் அவன் எப்போதோ பார்க்கப்பட்டிருப்பினும் அருகில் உள்ள இவனும் அவனே என்னும்போது ஒன்றுக்கு ஒன்று முரணாக இருப்பினும் ஒரே பொருளை குறிப்பிட்டுக் காட்டும். அதுபோலவே தத் தத்வம் அஸி வாக்யத்தில் தத் தூரஸ்த சைதன்யம் த்வம் ஸமீபஸ்த சைதன்யம். இரண்டும் முரண்பட்டாலும் ஒரே சைதன்யத்தைக் காட்டும்.*

**லக்ஷ்யலக்ஷணஸம்பந்தஸ்து யதா தத்ரைவ ஸசப்தாயம்சப்தயோஸ் தர்தயோர்வா விருத்த தத்காலைததவிசிஷ்டத்வ பரித்யாகேன அவிருத்த தேவதத்தேன ஸஹ லக்ஷ்யலக்ஷணபாவ: சததா அத்ராபி வாக்யே த த்த்வம் பதயோஸ்ததர்தயோர்வா விருத்த பரோக்ஷத்வ அபரோக்ஷத்வாதி விசிஷ்ட த்வ பரித்யாகேன அவிருத்த சைதன்யேன ஸஹ லக்ஷ்யலக்ஷண பாவ: ॥ 153**

*லக்ஷ்யலக்ஷண ஸம்பந்தம் ஸோயம் தேவதத்த: அந்த தேவதத்தனே இவன் என்று சொல்லும் போது இருவருக்கும் உள்ள முரண்பாட்டை விட்டு விட்டுப் பார்ப்பின் இவனே அவன் என்று பொருள்படும். அது போலவே தத் பதத்திற்கும் த்வம் பதத்திற்கும் உள்ள முரண்பாட்டை விலக்கின் தத் பதமும் த்வம் பதமும் ஒரே சைதந்யம் என்று பொருள் தரும்.*

*(தொடரும்)*

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம். டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம். மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா

## அனுத்யூத பர்வம்



பாண்டவர்களை மீண்டும் சூதாட அழைக்குமாறு த்ருத்ராஷ்ட்ரனிடம் துர்யோதனன் வேண்டுகிறான். அவனும் அவர்களை அழைத்து வரச் சொல்கிறான். இது கண்ட காந்தாரி கூறுவாள்.

தர்மம் தெரிந்த காந்தாரி சோகத்துடன் அரசனிட ம் கூறினாள். அரசே தெரிந்தே அணையை உடைப்பார்களா? நீறுபூத்த நெருப்பை யாரேனும் ஊதுவர்களா? நம் குலம் அழியக் காரணமாகாதீர். சாந்தமடைந்த பாண்டவர்களை ஏன் உசுப்பிவிடுகிறீர்? இப்படிச் செய்வது நம் குலத்துக்கு அவமானம் அன்றோ. குலனாசகாரனான இவனை தள்ளி விடுங்கள். த்ருதராஷ்ட்ரன் இவனைத் தடுக்க என்னால் முடியவில்லை. நம் குலம் அழியட்டும். மீண்டும் சூதாட பாண்டவர்களை அழை. நம் மக்கள் விளையாடட்டும்.

வெகுதூரம் சென்றுவிட்ட பாண்டவர்களை ப்ரதீகாமி தொடர்ந்து போய் அரசனே மீண்டும் உம்மை சூதாட அழைக்கின்றார் என்றான்.

யுதிஷ்ட்ரன் : விதியின் போக்கு விசித்ரமானது. நல்லதோ கெட்டதோ அதன்படி தான் நடக்கும். சூதாட்டம் போல் கெட்டது எதுவும் இவ்வுலகத்தில் இல்லை. இருப்பினும் கிழவர் சொல்லைத் தட்ட மறுக்கமுடியாமல் சூதாட நான் வருகிறேன். இப்படிச் சொல்லிய பின் தன் தம்பிகளுடன் தர்மர் மீண்டும் சூதாட அரசவைக்கு சகுனியின் கபடம் அறிந்தே வந்தார்.

சகுனி : வா தர்மனே இச்சூதாட்டத்தின் பணயம் கேள். உன்னால் நாங்கள் தோற்கடிக்கப்பட்டால் மரவுரி உடுத்தி பன்னிரெண்டு வருஷங்கள் காட்டில் உறைவோம். மேலும் ஒரு வருஷம் அஞ்யாத

வாஸம் செய்வோம். இந்த ஒரு வருஷம் உங்கள் கண்ணில் பட்டால் மீண்டும் பன்னிரெண்டு வருஷம் காடில் உறைவோம். அதேபோல் நீ தோற்கடிக்கபட்டால் த்ரௌபதியுடன் நீங்கள் ஐவரும் காட்டில் வசிக்க வேண்டும். ஒருவருடம் எமக்குத் தெரியாமல் வசிக்கவேண்டும். அவ்வருடத்தில் உம்மை நாங்கள் பார்த்தால் மீண்டும் பன்னிரெண்டு வருடம் காட்டில் வசிக்க வேண்டும். இந்த நிபந்தனையை ஏற்றுக்கொண்டு வா சூதாட த்ரோணர் பீஷ்மர் விதுரர் காந்தாரி குந்தி த்ரௌபதி இவர்களால் தடுக்கப்பட்டும் விதி அழைக்க தர்மர் சகுனியிடம் ஆட்டம் தொடங்கலாம் என்றார்.

கபட சகுனியும் விழியை உருட்டி சூதாட்டக் காய்களை உருட்டினான். வென்றோம் என்றான்.

(தொடரும்)





# அத்வைத ஸித்தாந்த வினா விடை

**வினா :- உலகைப் பரம்பொருள் என்று கூறி, சீவான்மாவைப் பரம்பொருள் என்று கூறாமற் போனால் என்ன குற்றம்?**

*விடை :- அங்ஙனம் கூறாமற் போனால், பரம்பொருளைத் தவிர வேறொரு பொருள் இருப்பதாக முடியும். 'துவைத புத்தி துயரந் தரும்' என்று முன்பே கூறினோம். அது மாத்திரமில்லாமல் பரமாத்மாவின் பூரணத்தன்மைக்கும் பங்கம் ஏற்படும்.*

**வினா:- ஜீவாத்துமா வேறு, பரமாத்மா வேறு என்று யாராவது பொருள் கூறுகின்றார்களா?**

*விடை :- சிலர் அவ்விதம் கூறுகின்றனர். நான் கறுப்பாயிருக்கிறேன் ' ' நான் பருத்தவனாயிருக்கிறேன் ' என்ற விடத்துக் கறுத்துப் பருத்த தன் தேகம் வேறு ; ஆன்மா வேறு' எனினும், இரண்டையும் ஒன்றுபடுத்தி உலகோர் கூறுவது போலவே, ஜீவனையும் அவனின் வேறான ஈசனையும் இவ்வாக்கியம் ஒன்று படுத்திக் கூறுகிறது என்கிறார்கள் வேறு சிலர். முத்தி நிலையில் ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றானாலும் அந்த அபேதம் உண்மையன்று என்றும் உரை காண்கிறார்கள்.*

**வினா :- இவ்வுரை சரியானதா ?**

*விடை:- இல்லை.*

**வினா :- ஏன் ?**

*விடை:- ஆன்மாவையும் அதனின் வேறான உடலையும் நான் பருத்தவன் என்று ஒன்றுபடுத்திக் கூறுவதே அஞ்ஞான மயக்கத்தால் ஏற்படுவது. ஆதலால், அது பொய்யே. அவ்வெண்ணமே பிறப்பிறப்பென்னும் துன்பத்திற்குக் காரணம். தாயுமான ஸ்வாமிகளும்,*

*அநியாயமா யிர்த உடலை நானென்றெண்ணி*
*யந்தகற் காளாகவோ!*

*(சச்சிதாநந்த சிவம்)*

*என்று கதறுகிறார். இவ்வெண்ணத்தை அநியாய மென்கின்றார்*

**வினா :- அதனால் என்ன ஏற்படுகிறது?**

*விடை-'நீ அதுவாக இருக்கிறாய்' என்ற மகாவாக்கிய உபதேசம் மோக்ஷத்திற்காக மறைமுடியில், ஞானோபதேசமாக உள்ளது. இவ்வுண்மை உபதேசத்தை*

அநியாயமும், பொய்யும் அந்தகற்காளாக்குவதுமான 'நான் பருத்தவன்' என்ற பாமர வாக்கியத்தைப் போலக் கொள்வது சரியன்று.

**வினா :- சீவாத்ம-பரமாத்ம-அபேதமே உண்மையாயிருக்க, வேறாகத் தோன்றும் தோற்றத்திற்கு வேதம் எதை உவமையாகக் கூறுகிறது?**

விடை :- உண்மையான ஒரு சூரியன் அநேக ஜலத்துளிகளில் பிரதிபலிக்கும் பொழுது உண்மையல்லாத அநேக சூரிய பிம்பங்கள் ஏற்படுவதை விளக்கிக் காட்டியிருக்கிறது. எங்கும் நிறைந்து ஒன்றாயிருக்கும் ஆகாயம் என்னும் வெளி, சுவர் போடப்பட்ட ' மடம் ' என்னும் ஒரு கட்டடத்தினாலும், குயவனாலாக்கப்பட்ட 'கடம்' என்னும் ஒரு குடத்தினாலும், சிறிது பெரிது என்னும் தோற்றத்திற்கும் வழங்கப்படுதற்கும் உள்ளா கிறது. இதுவும் சிலவிடங்களில் உவமையாகக் கூறப்பட்டிருக்கிறது.

**வினா :- இவ்வுவமைகள் எதை விளக்க வந்தன?**

விடை:- இவ்வுவமைகள் 'சீவத்தன்மை உண்மையன்று என்பதை விளக்குவதற்காக மட்டும் வந்தன.

**வினா:- சீவன் ஸம்ஸாரநிலையில் பரம்பொருளினின்றும் வேறுபட்டவனாகவே இருக்கட்டும்; முத்திநிலையில் புதிதாக ஒற்றுமை யேற்படட்டுமே. அந்த அந்த விதத்திலும் முத்தியில் அத்வைதம் ஏற்பட்டு விடுகிறதல்லவா!**

**முக்காலத்தும் சிவனே சீவனும் மற்றெல்லாமும் என்று ஏன் கொள்ள வேண்டும்?**

விடை :- சீவன் தோற்றத்தாலல்லாமல், உண்மையிலேயே பரம்பொருளினும் வேறுபட்டவனாயின், முத்தி நிலையிலும் அச் சீவன் பரம்பொருளுடன் ஒன்றாக மாட்டான். அப்படியொன்றாவதாகத் தோன்றிடினும், அது மெய்யாகாது. பொய்யாயின் முத்தியே யன்று. ஸம்ஸார நிலையில் தோற்றும் வேற்றுமையே மெய்யாகவும், முத்தியில் தோற்றும் ஒற்றுமை பொய்யாகவும் ஆகும்பொழுது, ஸம்ஸார நிலையே மோக்ஷமாகும். பொய்யறி வினால் ' பிறவிக் கடல்' ஏற்படும் என்றும், மெய்யறிவினால் 'மோக்ஷம்' சித்திக்கும் என்றும் மேற்கூறிய மறைமுடியா சாந்தோக்யம் 'மஹாவாக்யப்ரகரணத்தில் பறை சாற்றியிருக்கிறதே!

(தொடரும்)

# ஸ்ரீ ஜயதேவரும் அவர் அருளிச் செய்த கீத கோவிந்தமும்

### பாகம்-2

## ஸ்ரீ நாராயணதீர்த்தரும் அவர் அருளிச் செய்த ஸ்ரீ கிருஷ்ணலீலா தரங்கிணியும்

*55. உத்தவர் கோகுலம் சென்று ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா அருளிய தத்வ உபதேஸங்களை ஸ்ரீகிருஷ்ணனை பிரிந்து மனம் வருந்திய கோபியர்களுக்கு அளித்து அவர்களை மனச்சமாதானம் அடையச் செய்ததும் அவர்களின் ப்ரேம பக்தியை கண்டு வியந்து ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவிடம் தெரிவித்ததையும், ஸ்ரீதீர்த்தர் தரங்கம் 11 ஸ்லோ 94 முதல் 99 கீதம் 41-44 வரை விவரிக்கும் போது கோபியர்களின் வாயிலாகத் தான் ஸ்ரீ கிருஷ்ணரிடம் கொண்டிருக்கும் அத்யந்த ப்ரேம பக்தியை வெளிப்படுத்தியுள்ளது மெய் சிலிர்க்க வைக்கிறது. உத்தவர், கோபியர்களின் ப்ரேமபக்தியை கண்டு வியந்து 'எந்த கோபஸ்திரிகளினால் செய்யப்படும் ஸ்ரீகிருஷ்ணலீலாகானமானது, மூவுலகத்தையும் புனிதமாக்குகிறதோ அந்த கோபஸ்திரிகளின் பாததூளியை நான் அடிக்கடி வணங்குகிறேன்'' என்று கூறியது ஸ்ரீதீர்த்தரின் ப்ரேமபக்திக்கும் பொருந்துகிறது அல்லவா!! (பாகஸ்க 10 அத்யா. 47ஸ்லோ. 63)*

*56. ஸ்ரீ தீர்த்தர் 'கோபாலமேவ தைவதம்' (தரங்கம் 12 கீதம் 50) என்ற கீதத்தைப் பாடும் போதே திவ்யமான தன் கண்களால் புல்லாங்குழல் வாசித்துக் கொண்டும், தன் முன்னே நாட்டியம் ஆடிக்கொண்டிருக்கும் ஸ்ரீகிருஷ்ணனை கண்குளிரக்கண்டு பரவசமடைந்தார் என்றும், மேலும் ஸ்ரீதீர்த்தர் மீது உள்ள அபார கருணையினால், தரங்கிணி நூல் முடியும் வரை, ஸ்ரீகிருஷ்ணன் திவ்ய தரிஸனம் தந்து அவரை ஆனந்தக்கடலில் முழுகச்செய்தார் என்றும், ஸ்ரீகிருஷ்ணனின் விருப்பப்படியே ஸ்ரீருக்மிணி விவாஹத்துடன் தரங்கிணியை முடித்தார் என்று சிறந்த பாகவதோத்தமர்கள் கூறுகின்றனர், இந்தப் பாடலில் மிக்க பாக்யசாலியான தனக்கு உண்மைப் பொருளைக் காணும் திவ்ய சக்ஷுஸை (தெய்வீகப் பார்வையை) ஸ்ரீகிருஷ்ணன் அளித்தான்' என்று புகழ்கிறார். கோபாலன் என்ற தெய்வத்தையே வழிபடுகிறேன், வேறு ஒருவரையும் தெய்வமாகக் கருதமாட்டேன் என்றும் கூறுகிறார்.*

*57. ஸ்ரீதீர்த்தர், 'காங்க்ஷே தவ ப்ரஸாதம்' (தரங்கம் 12 கீதம் 51) என்ற கீதத்தில் தான், பலக்ஷேத்திரங்களில் தங்கியிருந்தபோதிலும், தீராது தன்னை தொடர்ந்து வாட்டிவந்த வயிற்றுவலி, வராஹபுரி பெருமாள் ஸந்நிதியில் தான் தீர்ந்தது என்ற விவரத்தை கடைசி சரணத்தில் 'வர நாராயண தீர்த்த வாரித் துஸ்தரா நர்தக ' என்று தெரிவிக்கிறார்.*

58. தரங்கம் 12 'ப்ரஹ்ம க்ரந்திம்' என்று தொடங்கும் கீதம் 58ல் ஸ்ரீதீர்த்தர், லக்னாஷ்டகம், ஸ்ரீகிருஷ்ண ருக்மணி விவாஹ நிகழ்ச்சிகளை - மணமகள் மணமகனுக்கு முத்துக்களால் அபிஷேகம் செய்வது ப்ரஹ்மக்ரந்தி லாஜ ஹோமம் ஸ்தாலிபாகம், நாகப்பலி, ஆகிய கல்யாண ஸம்ப்ரதாயங்களை ஆந்திரர்களின் அனுஷ்டானப்படி விவரித்துள்ளார்.

59. 'மங்களாதீனிங்கள மத்யானம், மங்களான்தானி ஸாஸ்த்ராணி வீரயவத் புருஷகர்த்ருகாணி ப்ரதந்தே'- துவக்கம், நடுவு, முடிவு இவற்றில் மங்களாஸாஸனத்துடன் கூடிய நூல்கள் இவ்வுலகில் நீண்டகாலம் புகழோடு விளங்குகின்றன என்ற ஆன்றோர் வசனப்படி ஸ்ரீதீர்த்தர் ஸ்ரீகிருஷ்ணலீலா தரங்கிணியை தொடக்கத்தில் 'ஹிமகிரிதனயாபத்யம்' என்ற வினாயக ஸ்துதியுடன் ஆரம்பித்து நடுவில் 'கல்யாணம் விதனோது' என்ற பாலகிருஷ்ண ஸ்துதியையும் தாக்குர்வந்தவபிதானி' என்ற ஸ்ரீகிருஷ்ண ருக்மணி விவாஹத்தில் பங்குகொண்ட நல்முத்துக்களின் ஸ்துதியை அமைத்து, முடிவில் ஜய மங்களம் என்ற மங்கள் கீதத்துடனும் முடித்து அருளிச் செய்திருக்கிறார் என்பது இந்நூலின் தனிச்சிறப்பு. ஆன்றோர் வாக்குப்படி இந்த தெய்வீகக் காவ்யம் சூர்ய சந்திரர்கள் இருக்கும் வரை புகழோடு இவ்வுலகில் இருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

60. ஸ்ரீ தீர்த்தர் வேதங்கள், உபநிஷத்துக்கள், ஸாஸ்த்திரங்கள், புராணங்கள் இவைகளைப் ப்ரமாணமாகக் கொண்டு ஸ்ரீகிருஷ்ணலீலா தரங்கிணியை அருளிச் செய்தார். மேலும் ஸ்ரீதீர்த்தர், ஸ்ரீகிருஷ்ணலீலா தரங்கிணியை ஸ்ரீமத் பாகவதத்தை அனுஸரித்தே தஸம ஸ்கந்த கிருஷ்ணலீலைகள், ஸ்ரீ ருக்மிணி விவாஹ பர்யந்தம் அருளியுள்ளார். ஸ்ரீமத்பாகவதத்தில், ராதை என்ற கதாபாத்திரத்தைப் பற்றி ஒன்றும் குறிப்பிடாமல், மொத்தமாக கோபிகைகள் என்றே ஸ்ரீவியாஸாச்சாரியார் குறிப்பிட்டுள்ளார், இருப்பினும் ஸ்ரீதீர்த்தர் 8வது தரங்கத்தில், கிருஷ்ண ராதை சம்பாஷணை, பிரிவாற்றல் , பிணக்கு ஆகியவைகளை விவரித்துள்ளார். ஏன் இந்த மாறுபாட்டைச் செய்தார் என்று ஆராயுங்கால் கீழ்க்கண்ட இரண்டு காரணங்கள் இருக்கலாம் என்று நினைக்கத் தோன்றுகிறது.

(தொடரும்)

# ஸனாதன தர்மம் : கேள்வி பதில்கள்

ரா ஸ்ரீ

73. **கேள்வி : ப்ரம்ம முகூர்த்தம் எது?**

பதில் : இரவின் முடிவில் மூன்றாவது முஹூர்தம் ப்ரம்ம முஹூர்த்தம் எனப்படும். ரிஷிகள் இரவினை 58 கடிகைகளாகவும், 57ஆவது கடிகை அருணோதயம் எனவும் 58இல் விடியற்காலம் எனவும் கணக்கிட்டுள்ளார்கள். பின்பு ஸூர்யோதயம்.

74 . **கேள்வி :** இரவு என்பது என்ன?

பதில் : ஸூர்யனுக்கு எதிர் பக்கம் பூமி வரும்போது இரவு எற்படுகிறது.

75. **கேள்வி :** முஹூர்த்தம் என்றால் என்ன?

பதில் : 11/2 மணிகாலம் முஹூர்த்தம் எனப்படும்.

76. **கேள்வி :** ஒரு பகல் இரவில் எத்தனை முஹூர்த்தங்கள்?

பதில் : 15 முஹூர்த்தம் பகலாகவும், 15 முஹூர்த்தம் இரவாகவும் சொல்லப்படும்.

77. **கேள்வி :** இரவின் முஹூர்த்தங்கள் பெயர் என்ன?

பதில் : சங்கர அனபா, அஹிர்புத்ன்ய, பூஷா ஆஸ்வின வாநேம வைதாத்ர, சாந்த்ர ஆதிதேய ஹைவ ,வைஷ்ணவ சௌர,ப்ராம்ம,நாமஸ்வத

78. **கேள்வி :** பகலின் முஹூர்த்தங்களின் பெயர் என்ன?

பதில் : ரௌத்ர ஸ்வேத மைத்ர சாரமட, ஸாவித்ர வைஸ்வதேவ, காந்தர்வ குதுப, ரோஹிண, திலக விபவ, நைருதி, சாம்பர விஜய பக.

79. **கேள்வி :** ப்ரம்ம முஹூர்த்தத்தில் எழுந்திராவிடில் என்ன நடக்கும் ?

பதில் : புண்னியம் யாவும் அழியும்.

80. **கேள்வி :** இதற்குப் ப்ராயச்சித்தம் உண்டா?

பதில் : பாத க்ருஸ்ர வ்ரதத்தை அனுஷ்டிக்க வேண்டும்

81. **கேள்வி :** த்விஜர்கள் யார்?

பதில் : ப்ராம்மண, க்ஷத்ரிய, வைஸ்யர்கள், த்விஜர்கள்.

82. **கேள்வி :** ப்ரம்ம முஹூர்த்தத்தில் எழுவதால் என்ன பயன்?

பதில் : ஆயுள் வளரும், நினைவாற்றல் பெருகும், ஸாத்விகமான எண்ணங்கள் தோன்றும். புண்ணியம் பெருகும்.

83. **கேள்வி :** ஸ்னானங்கள் எத்தனை விதம்?

பதில் : 7 வகை மந்த்ர, பௌம, ஆக்னேய, வாயவ்ய, திவ்ய, வாருண, மானஸ

84. **கேள்வி :** பலவித தர்மங்களில் தர்மத்தைப் பற்றி என்ன சொல்லியுள்ளது ?

பதில் : சாங்க்யம், அந்தகரண வளர்ச்சி தான் தர்மம், ந்யாய வைசேஷிகம், ஜீவாத்மாவின் குணவிசேஷங்கள், தர்மம், மீமாம்சை, வேள்வி செய்தல், வேதம் ஓதுதல், தானம் செய்தல், தர்மம் வேதாந்தம் அனைத்துச் செயலையும் பகவானுக்கு அர்ப்பணித்தல் தர்மம்

85. **கேள்வி :** தர்ம அதர்மத்தின் வடிவமென்ன?

பதில் : வேதம் ஓதுதல், தானம், கடவுளை உபாசித்தல், தவமிருத்தல், ஞானத்தை அடைய முயற்சி செய்தல் சத்யம், தர்மம், ப்ரம்மசர்யம், பரோபகாரம் இவைகளை கடைபிடித்தல் தர்ம லக்ஷணம். இதற்கு மாறாக பேராசையால் அலைவது, திருடுதல் அசத்யம், அதர்மம், வேத நிந்தனை சூது, கள்குடித்தல் இவை அதர்மத்தின் லக்ஷணம்.

86. **கேள்வி :** தர்மத்தின் லக்ஷணம் எது?

பதில் : வேதத்தில் சொல்லப்பட்டுள்ள செயலைச் செய்வதால் ஏற்படும் அத்ருஷ்ட பலனை தர்மம் என்றும் இதற்கு நேரிடையாக உள்ளதை அதர்மம் என்பர்.

87. **கேள்வி :** வேதத்தில் சொல்லப்பட்டுல்ள அபிசார ஹோமங்களை தர்மம் எனலாமா ?

பதில் : கூடாது. எச்செயலும் விறுப்பு, வெறுப்பு இன்றி செயப்படவேண்டும். இன்னொருவரை ஹிம்சிப்பது ஆபசாரம். அது அதர்மமே.

88. **கேள்வி :** இவை ஏன் வேதத்தில் உள்ளன?

பதில் : கெடுதியைத் தெரிந்து கொண்டு அதனைத் தவிர்ப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதால் தான் இவைகளும் இடம் பெற்றுள்ளன.

**(தொடரும்)**